விலை: 30.00
பக்கங்கள் - இருபது

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
021 720 1005
இல.44,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1500/= + 500/=

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 24 செவ்வாய்க்கிழமை (06.04.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 108

கொரோனாத் தொற்றால்
## யாழ்ப்பாணத்தில் முதியவர் ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
கொரோனா வைரஸ் தொற்றால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற 71 வயதுடைய முதியவர் ஒருவர் 19


## இராயப்பு ஜோசப் ஆண்டகையின் உடல் கண்ணீருடன் அடக்கம்



(மன்னார்)
மறைந்த மன்னார் மறை மாவட்ட ஓய்வுநிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திருவு 19

சிவல்புரி சிங்காரம் எழுதும்
**புத்தாண்டு பலன்கள்**
நாளை முதல் உங்கள் வலம்புரியில்

இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல
# தமிழர்களே ஆதிக்குடிகள்



## ஜனாதிபதியின் கருத்துக்கு விக்னேஸ்வரன் பதில்

(யாழ்ப்பாணம்)
- தமிழர்களே ஆதிக்குடிகளாக இருந்தனர் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.
- பௌத்த பிக்குகள் கூறும் தப்பான சரித்திரத்தை முன்வைத்து தவறான முடிவுக்கு வரக்கூடாது.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வெப்பமான காலநிலை தீவிரமாகக் காணப்படும்
### யாழ்., கிளிநொச்சி, முல்லை உட்பட 13 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், கிளிநொச்சி முல்லைத்தீவு உட்பட 13 மாவட்டங்களில் வெப்பமான காலநிலை அதிகமாக காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 19

## மோட்டார் சைக்கிளுடன் டிப்பர் மோதி விபத்து
### தந்தை பலி; மகன் படுகாயம் புதுக்குடியிருப்பில் சம்பவம்

(பனிக்கன்குளம்)
புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் தேராவில் பகுதியில் இடம்பெற்ற 19

## கொரோனாவால் 5 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)
நாட்டில் கொரோனா தொற்று காரணமாக நேற்று மேலும் ஐவர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
அந்த வகையில் நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணி 19

## யாழில் மேலும் 15 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி
### 8 பேர் நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்டவர்கள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேலும் 15 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் ஒருவருக்கும் கொரோனா தொற்றுள்ளமை நேற்று திங்கட் 19

இலங்கையில் அதிக நன்மைகளை கொண்ட மொபைல் முற்கொடுப்பனவு Planக்கு மாறுங்கள்
TRIPLE BLASTER
D2D 1150 நிமிடங்கள்
D2D 1150 SMS
Anytime Data 550MB
FREE Bonus Data 825MB
(Anytime 4G Bonus 275MB, Night Bonus 550MB)
ரூ. 345/-*
*வரிகள் உள்ளடங்களாக
செயற்படுத்திக்கொள்ள ரூ.345/-ஐ ரீலோட் செய்யுங்கள் அல்லது #678# டயல் செய்யுங்கள்
Dialog
எதிர்காலம் இன்றே.
(C-1305)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வவுனியா குருமன்காட்டில் வாள்வெட்டுத் தாக்குதல்

## இருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா, குருமன்காடு, காளிகோவில் வீதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, குருமன்காடு, காளிகோவில் வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, குருமன்காடு மற்றும் திருநாவற்குளத்திற்கு இடைப்பட்ட பகுதியில் வாள், கத்திகளுடன் ஒரு குழுவினர், பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியதுடன், அப்பகுதியால் செல்வோரை வாள்களை காண்பித்து அச்சுறுத்தியும் உள்ளனர்.

இதன்போது குறித்த வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்கு தெரியப்படுத்தியதையடுத்து வவுனியா, குருமன்காடு காளி கோவில் வீதிக்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டதுடன், வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்ய நடவடிக்கையும் எடுத்திருந்தனர். (ம-03,250)

# தமிழக சட்டமன்ற தேர்தல் இன்று

(சென்னை)

தமிழக சட்டமன்ற தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இத் தேர்தலில் 3,998 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

தேர்தலுக்காக 88 ஆயிரத்து 937 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 300 வாக்குச்சாவடிகள் மிகவும் பதற்றமானவை என்றும், மேலும் 10 ஆயிரத்து 528 சாவடிகள் பதற்றமானவை என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சட்டமன்ற தேர்தலை அமைதியான முறையில் நடத்த தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 372 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆயுதப் படை மற்றும் உள்ளூர் பொலிஸார், தமிழ்நாடு சிறப்பு படை பொலிஸாரும் உள்வாங்கப்பட்டுள்ளனர். (ம-03)

# பேராயர் கர்தினால் கருத்து கவலை தருவதாக உள்ளது

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தன்னைப் பற்றி தெரிவித்துள்ள விடயங்கள் கவலையளிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று திங்கட்கிழமை நாவல பிரதேசத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிர்வாக சேவையாளர் சங்கம் நாவல பிதேசத்தில் கட்சி தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியது.

கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் பேராயரின் கருத்து தொடர்பில் ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட போதே , "பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை என்னைப் பற்றி தெரிவித்துள்ள விடயங்கள் கவலையளிக்கின்றன" என்று அவர் குறிப்பிட்டார். (ம-03)

# யாழ். பொம்மைவெளியில் ஹெரோயின், கஞ்சாவுடன்

## ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். பொம்மைவெளி பகுதியில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு கிலோ 750 கிராம் கஞ்சாவுடன் 35 வயதான ஆண் ஒருவரும், 5 கிராம் 750 கிராம் ஹெரோயினுடன் 33 வயதான பெண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் குறித்த பெண்ணிடமிருந்து சுமார் 80 ஆயிரம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

விசாரணைகளின் பின் யாழ்.நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் கூறினர். (ம-03)

# தேர்தல் சட்டங்களில் மாற்றங்களை அடையாளம் காண

## குழுவொன்றை நியமிக்க தீர்மானம்

(கொழும்பு)

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளில் பொருத்தமான மாற்றங்களை அடையாளம் காணவும், தேவையான திருத்தங்களை பரிந்துரைக்கவும் ஒரு தேர்வுக் குழுவை நியமிப்பதற்கான தீர்மானத்தை பாராளுமன்ற அவைத் தலைவர் தினேஷ் குணவர்தன முன்வைத்துள்ளார்.

இந்த யோசனையின்படி குழுவின் தலைவர் மற்றும் குழுவின் உறுப்பினர்கள் சபாநாயகரால் நியமிக்கப்படுவார்கள்.

அதே நேரத்தில் குழு அதன் முதல் ஆறு மாதங்களுக்குள் அல்லது பாராளுமன்றம் வழங்கக்கூடிய நீண்ட காலத்திற்குள் சபைக்கு தமது அறிக்கை சமர்ப்பிக்கும். குழு எந்தவொருவரையும் வரவழைத்து ஆலோசனைகளை பெறலாம்.

நிபுணர்களின் சேவைகளைப் பெறலாம் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளில் வல்லுநர்கள் மற்றும் அவ்வப்போது இடைக்கால அறிக்கைகளை வெளியிடவும் குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

அதேநேரம் எதிர்க்கட்சியின் திட்டங்களும் வரவேற்கப்படும் என்றும் அவைத்தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார். (ம-03)


## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி 31.03.2021 இல் கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கம்பனி பெயர்** - யாழ். செக் சொலுசன் (பிறைவேட்) லிமிட் **கம்பனி இல** - PV00237487

**பதிவு செய்த முகவரி** - 140/4, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

**கம்பனி செயலாளர்** - எம். இராஜநாயகம்

(6474)


# சிவஞானசோதி காலமானார்



(யாழ்ப்பாணம்)

இலங்கையில் மூத்த தமிழ் அரச அதிகாரி வேலாயுதன் சிவஞானசோதி நேற்றிரவு காலமானார். திடீர் சுகயீனம் காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், நேற்று இரவு காலமானார்.

பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் உறுப்பினராக தற்போது பதவி வகிக்கும் அவர், பல்வேறு அமைச்சுகளின் செயலாளராகவும் கடந்த காலங்களில் பதவி வகித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண அபிவிருத்தியில் ஓர் அரச அதிகாரியாக அவர் பல்வேறு வழிகளில் சேவையாற்றியிருந்தார்.

அவரது நேர்மையான திறமையான நிர்வாகத் திறனை பாராட்டி பாராளுமன்ற பொதுக் கணக்குகள் குழு உட்பட பல்வேறு துறைகளால் பாராட்டும் விருதுகளையும் பெற்றவர். (ம-03,33)


# கண்ணீர் அஞ்சலி



திருமறையின் கலைமகனே
கலாமன்றின் கதிரவனே- தங்கள்
கலைத்துறைப் பூங்காவில்
சிறுமலர்கள் எமையும்
உற்சாகமாய் இணைத்தீரே...!!!
விழி நிறை நீருடன் விடை தருகின்றோம்
விண்ணிலிருந்து வழிநடத்துவீராக...!!!

(6473)

'கலைத்தூது' அருட்கலாநிதி

**நீ. மரிய சேவியர் அடிகள்**

(ஸ்தாபகர், இயக்குநர் - திருமறைக் கலாமன்றம்)

மலர்வு: 03.12.1939 உதிர்வு: 01.04.2021

LITTLE CHUTTYS MONTESSORI

No.5, 23/2, Brodie Front Lane, Kandy Road, Jaffna.


# 233 பேருக்கு காணி கொள்வனவு செய்ய நிதி கிடைத்துள்ளது

## யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உயர்பாதுகாப்பு வலயத்தினால் இடம்பெயர்ந்த காணி இல்லாத 233 பேருக்கு காணி கொள்வனவு செய்வதற்கான பணம் கிடைக்கப்பெற்றுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் 3056குடும்பங்கள் இடம்பெயர்ந்து நண்பர்கள், உறவினர்கள் வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை விட 409 குடும்பங்கள் தற்காலிக நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த 2020 ஆம் ஆண்டு 86 குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் காணி வாங்கிக் கொடுத்து வீடும் கட்டிக் கொடுக்கப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புப் பட்டியலிலுள்ளவர்கள் நாட்டில் இருந்தால் உடன் சிறையில் அடைக்கப்படுவர்

**(கொழும்பு)**

**இலங்கையிலுள்ள பலரது பெயர்களும் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

இலங்கை அரசு அண்மையில் தடை செய்யப்பட்ட தனிநபர்கள் மற்றும் அமைப்புக்களின் பட்டியலை வெளியிட்டது.

இந்தப் பட்டியலில் தடை செய்யப்பட்ட் நபர்களாக அறிவிக்கப்பட்ட சிலர் இலங்கையில் வசித்து வருகின்றனர்.

இவ்வாறானதொரு நிலையில் அவர்களை இலங்கை அரசு நாடு கடத்துமா? என்று அமைச்சர் சரத் வீரசேகரவிடம் ஊடகங்கள் கேட்டபோதே அவர் குறித்த விடயத்தை தெரிவித்துள்ளார்.



இதன்போது மேலும் தெரிவிக்கையில், அரசு வெளியிட்ட தடைப் பட்டியலில் உள்ளவர்கள் இலங்கையில் இருந்தால் அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

அவர்களுடன் தொடர்புகளைப் பேணுவோரும் சிறையில் அடைக்கப்படுவார்கள் என குறிப்பிட்டுள்ளார். (நி-4)





மன்னார் மறை மாவட்ட முன்னாள் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் இறுதி திருப்பலி மன்னார் மறை மாவட்ட ஆயர் லயனல் இமானுவேல் பெர்னாண்டோ தலைமையில் ஏனைய ஆயர்களின் பங்கு பற்றுதலுடன் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

(படம்: யோசப் நயன்)

## மரண அறிவித்தல்



மலர்வு 03 . 12 . 1939

உதிர்வு 01 . 04 . 2021

**அருட்கலாநிதி**
**நீக்கிலாப்பிள்ளை மரிய சேவியர்**
(திருமறைக் கலாமன்ற இயக்குநர்)

B.Th. L.Th.(Rome), Vidvan/Pulavar(Madurai), M.A.,Ph.D(London). D.Th., (Passau/Germany), Ph.D.hc. (University of Jaffna)

யாழ்ப்பாணம், இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். மறைமாவட்டத்தின் மூத்த குருவுமாகிய அருட்கலாநிதி நீக்கிலாப்பிள்ளை மரிய சேவியர் (சவிரிமுத்து) அடிகள் 01. 04. 2021 வியாழக்கிழமை இறைபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை எமிலியாப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற ஞானசௌந்தரி மற்றும் அருளானந்தம் ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற அந்தோனிமுத்து மற்றும் மேரி அஞ்சலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சென்மேரி பிலோமினா ( வேவி ), காலஞ்சென்ற மேரி மாகிறட்( வவா ) மற்றும் பவுலின் ( கிளி ), மரிய ஞானமலர் ( மணி ) ஆகியோரின் அன்பு மாமனும், அன்ரன் இம்மானுவேல் (பிரான்ஸ்), அன்ரன் நீக்கிலஸ் (கனடா), அன்ரன் ஜெயசீலன் (கனடா), அன்ரன் ஜெயபாலன் (கனடா), அன்ரன் மரிய சேவியர் (கிங்), அருட்தந்தை அன்ரன் ஸ்ரீபன் (யாழ். மறைமாவட்டம்), அன்ரனிற் அருந்தவமலர் (யமுனா), அன்ரன் எமிலியானுஸ்பிள்ளை (சாள்ஸ்), அன்ரனிற் மரிய கொறற்றி (சாள்சினி) ஆகியோரின் சிறிய தந்தையாரும், நொயலா, ஷமிக்கா, றெஜி, ஜஸ்மின், அன்ரனிற்றா, ராஜன், ஷோபினி, விமல் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று (06. 04. 2021) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமாகும். தொடர்ந்து 9.30 மணிக்கு யாழ். மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அடிகளாரின் புகழுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
நீ. அருளானந்தம் (சகோதரர்)
(0773146011)

*புனித றீற்றம்மாள் கோவிலடி,*
*இளவாலை*

(C-1892)

## தமிழீழம் அமைப்பதற்கு வழிகோலும் பௌத்த தேரர்கள் - மனோகணேசன்

(கொழும்பு)

தனித்தமிழீழத்தை இலங்கை தீவில் அமைப்பதற்கும், சர்வதேச சமூகம் அதற்கு உதவும் வகையில் சில தேரர்களின் செயற்பாடு அமைவதாக முன்னாள் அமைச்சர் மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது முகப் புத்த கத்தில் அவர் பதிவிட்டுள்ளதாவது. "கறுப்பு ஜுலை புகழ் கொண்ட ஒரு தேரர் உட்பட பௌத்த தேரர்களின் குழு மூன்று பிரேரணைகளை தேசிய அரங்கில் முன் வைத்துள்ளது. நாட்டின்பெயரை "சிங்களே" என மாற்றனும், அதிகார பரவலாக்கம் வேண்டவே வேண்டாம், சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்பதே அப் பிரேரணைகளாகும்.

அதாவது இந்த தேரர்கள் மறைமுகமாக "உங்களுக்கு இங்கு இடமில்லை. தனித்த மிழீழ நாட்டை இலங்கைத்தீவில் அமையுங்கள்" என தமிழர்களுக்கும் அதற்கு உதவுகள் என சர்வதேச சமூகத்துக்கும் கூறுகிறார்கள். ஆகவே இந்த தேரர்கள் இன்று இலங்கையில் பிரதான பிரிவினை வாதிகள் மீண்டும், மீண்டும் இலங்கைக்கு கறுப்பு பெயிண்ட் அடிக்கிறார்கள்." என மனோ கணேசன் பதிவிட்டுள்ளார். (நி-4)

## நாடு கடத்தப்பட்டவர்களிடம் சி.ஐ.டி,ரி.ஐ.டி விசாரணை

(கொழும்பு)

"சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட 24 பேரிடமும் குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.), பயங்கரவாத தடுப்புப் பிரிவு (ரி.ஐ.டி.) என்பன விசாரணைகளை நடத்தும். அதன் பின்னரே அவர்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும்" என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர ஊடகங்களிடம் தெரிவித்தார்.

குடிவரவு - குடியகல்வுச் சட்டத்தை மீறி 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனில் சட்ட விரோதமான முறையில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஜேர்மனிலிருந்து 20 பேரும், சுவிட்சர்லாந்தில் இருந்து 4 பேரும் சில நாட்களுக்கு முன்னர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர்.

அவர்கள் இராணுவத்தின் கண்காணிப்பில் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஆவது ஒருநாள் தொடர்;தென்னாபிரிக்கா வெற்றி போராடி தோல்வி கண்டது பாகிஸ்தான்

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 ஒருநாள் மற்றும் நான்கு 20 ஓவர் போட்டிகளில் விளையாடுகிறது.

இவ்விரு அணிகள் இடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டி ஜோகன்னஸ்பேர்க்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் டொஸ் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது.

முதலில் பட்டிங் செய்த தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 341 ரன்கள் குவித்தது. குயின்டன் டி கொக் 80 ரன்கள், கப்டன் தெம்பா பவுமா 92 ரன்கள், வான்டெர் டஸன் 60 ரன்கள் மற்றும் டேவிட் மில்லர் ஆட்டமிழக்காமல் 50 ரன்கள் விளாசினர்.

342 ரன்கள் என்ற இலக்கை நோக்கி பாகிஸ்தான் அணி களம் இறங்கியது.

தொடக்க வீரராகக் களமியங்கிய பாகார் ஸமான் இறுதி வரை போராடி 155 பந்துகளில் 18 பவுண்டரிகள், 10 சிக்ஸர்கள் உட்பட மொத்தம் 193 ரன்கள் விளாசினார்.



இறுதி ஓவரின் முதல் பந்தில் பாகார் ஸமான் ரன் அவுட் ஆக மறுமுனையில் அவருக்கு ஈடு கொடுக்கும் வகையில் பட்ஸ்மன்கள் யாரும் நிலைத்து நிற்கவில்லை.

இதனால் பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 324 ரன்கள் மட்டும் எடுத்து 17 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதன் மூலம் 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் தற்போது 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. (4)

## கரப்பந்தாட்ட இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச அணி வெற்றி



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்ட 34 ஆவது ஆண்டு ரூபவாஹினி கரப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை ஆவரங்கால் மத்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட பெண்கள் அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச இளைஞர் அணியை எதிர்த்து கோப்பாய் மத்தி அணி மோதியது. முதல் செற்றில் கரவெட்டி பிரதேச இளைஞர் அணி பலத்த போராட்டத்தில் 25:20 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்று இருந்தது.

இரண்டாவது செற்றில் ஆதிக்கம் செலுத்திய கரவெட்டி பிரதேச செயலக இளைஞர் சம்மேளன அணி 25:14 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (4-6)

## ஈஸ்டர் கிண்ண பிறீமியர் லீக்; பழைய மாணவர் அணி வெற்றி

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலய பழைய மாணவர்களுக்கிடையில் நேற்று முன்தினம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஈஸ்டர் கோப்பை பிறீமியர் லீக் போட்டி நடைபெற்றுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் நோக்கிலும் பாடசாலையின் வளர்ச்சி கருதியும் பிரித்தானியா, பிரான்ஸ், கனடா நாடுகளில் உள்ள பழைய மாணவர்களின் அனுசரணையுடன் றோமன் கத்தோலிக்க வித்தியாலய பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட 8 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் பழைய மாணவர்கள் உள்ளடக்கிய 7 அணிகள் பங்கு பற்றின.




இறுதிப்போட்டிக்கு 2017 ஆம் ஆண்டு பழைய மாணவர் அணியும், திறந்த அணியினர் அணியினரும் மோதினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய திறந்த அணியினர் 8 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றனர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய 2017 ஆம் ஆண்டு பழைய மாணவர் அணியினர் 6.2 ஓவர்களில் 39 ஓட்டங்களை பெற்று வெற்றிக்கிண்ணத்தினை சுவீகரித்துள்ளார்கள்.

வெற்றிபெற்ற அணிகளுக்கான கிண்ணங்கள், கேடயங்களையும் வழங்கி கௌரவித்துள்ளார்கள். (4-6-281)

## மியாமி ஓபன்;ஜானிக் சின்னரை வீழ்த்தி சம்பியன் பட்டம் பெற்றார் ஹூபர்ட் ஹர்காஸ்



மியாமி ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான இறுதிப் போட்டி நேற்று முன்தினம் புளோரிடாவில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் ஜானிக் சின்னரும் ஹூபர்ட் ஹர்காஸும் மோதினர்.

சுமார் ஒரு மணிநேரமும் 43 நிமிடங்களும் நீடித்த இந்த ஆட்டத்தின் இறுதியில் 24 வயதான ஹூர்காஸ் 7-6 (7-4) 6-4 என்ற செட் கணக்கில் வென்றார்.

இந்த வெற்றியின் மூலம் ஏடிபியின் உயர்மட்ட பட்டங்களில் ஒன்றை வென்ற முதல் போலந்து ஒற்றையர் வீரர் என்ற பெருமையை பெற்றார்.

உலக டென்னிஸ் தரவரிசையில் 37 ஆவது இடத்தில் இருக்கும் நடால், நோவக் ஜோகோ விச் மற்றும் ரோஜர் பெடரர் ஆகியோர் மியாமி ஓபன் தொடரில் பங்கேற்கவில்லை.

இருப்பினும் ஹூர்காஸ் உலக நம்பர் 5 வீரரான ஸ்டீபனோஸ் சிட்ஸிபாஸ் மற்றும் உலக நம்பர் 8 வீரரான ஆண்ட்ரி ரூப்லெவ் ஆகியோரை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-6)

## சேஸிங்கில்; புதிய சாதனை பாக்.வீரர் பகார் ஸமான்

சேஸிங் அதாவது ரன் இலக்கை துரத்தும் போது அதிக ரன்கள் குவித்து பாகிஸ்தான் வீரர் பகார் ஸமான் புதிய உலக சாதனை படைத்துள்ளார். தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்த சாதனையை அவர் நிகழ்த்தியுள்ளார். 155 பந்துகளில் 193 ரன்கள் விளாசியதன் மூலம் இந்த சாதனையை பகார் ஸமான் படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் வெற்றி பெற 342 ரன்கள் இமாலய இலக்கை பாகிஸ்தான் துரத்தியது. அபாரமாக ஆடிய பகார் ஸமான் கடைசி ஓவரில் கவனக்குறைவால் தனது



விக்கெட்டை ரன் அவுட் மூலம் தாரைவார்த்தார்.

இதற்கு முன்னதாக அவுஸ்திரேலியாவின் ஷேன் வொட்சன் 185 (நொட் அவுட்), ரன்கள் எடுத்து சாதனைப் பட்டியலில் இடம்பிடித்து இருந்தார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்படையினரையும் கைது செய்து சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்த திட்டம்

## பதறுகிறார் பீரிஸ்

(கொழும்பு)

**முப்படையினரையும் கைதுசெய்து சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கான திட்டம் காணப்படுகின்றது என கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**



கண்டியில் ஊடகவியலாளர்களுக்கு இதனை தெரிவித்துள்ள அமைச்சர் பொதுமக்கள் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சட்டங்களை உருவாக்குவது, அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொள்வது, முப்படையினரினதும் நியமனங்களை மேற்கொள்வது போன்றவற்றை முன்னெடுப்பதன் மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையும் ஆணையாளரும் இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு அனுமதிக்கவேண்டுமா எனக் கேள்வி எழுப்பியுள்ள அமைச்சர் பாராளுமன்றத்தின் பங்களிப்பு என்னவெனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் படி இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் என மனித உரிமை கருதுகின்றது, என தெரிவித்துள்ள அமைச்சர் 12.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவழித்து முப்படையினரையும் கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கான திட்டம் காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையை பயன்படுத்தி சில நாடுகள் தங்கள் நிகழ்ச்சி நிரலை பூர்த்தி செய்ய முயல்வதற்கு எதிராக கட்சி பேதங்களை மறந்து விட்டு அனைத்து தரப்பினரும் ஒன்றுபட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.நாவிலுள்ள சில நாடுகளின் தலைவர்கள், தேர்தல்களுக்கு புலம்பெயர்ந்தோரின் ஆதரவை வெளிப்படையாக கோரியுள்ளனர். இந்நிலையில் எந்தவொரு அரசியல் கட்சியும் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் எழுப்பவில்லை என்றால், அது நாட்டுக்கு எதிரான துரோகத்தின் வடிவமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# அடுத்த சில மாதங்களுக்குள் யாழ்.-சென்னை விமான சேவை

## ஆரம்பிக்கப்படும்-சுற்றுலாத்துறை அமைச்சர்

(கொழும்பு)

யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்துக்கும் இந்தியாவின் சென்னைக்கும் இடையில் அடுத்த சில மாதங்களுக்குள் பயணிகள் விமான சேவைகளை மீண்டும் தொடங்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாலைதீவை தென்னிந்திய இடங்களுடன் இணைக்கும் விமான நடவடிக்கைகள் இலங்கை வழியாகத் தொடங்கப்படும் எனவும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பல விமான நிறுவனங்கள் ஏற்கனவே இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-4)

# சபை ஒத்திவைப்பு நேரத்தில் 2 கேள்விகள் கேட்க அனுமதி

## சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் தொடர்பில் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போது பாராளுமன்ற பின்வரிசை உறுப்பினர்களுக்கு கேள்வி எழுப்புவதற்கு சந்தர்ப்பம் வழங்க பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்கு ஒதுக்கப்பட்ட தினங்களில் முறையாக ஆளும் கட்சியினர் மற்றும் எதிர்க்கட்சியினருக்காக ஒரு கேள்வி விகிதம் இரண்டு கேள்விகளுக்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங்குவதாக சபாநாயகர் தெரிவித்தார்.

உரிய உறுப்பினருக்கு கேள்வியை கேட்பதற்கு 5 நிமிடங்கள் வழங்கப்படுவதுடன் உரிய அமைச்சர் பதிலளிப்பதற்கு 5 நிமிடங்களும் ஒதுக்கப்படும்.

சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகள் "அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்கு" மாத்திரம் மட்டுப்படுத்தப்படுவதுடன், குறித்த கேள்வி அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுடன் தொடர்புபட்டதா? என்பது தொடர்பில் சபாநாயகரினால் தீர்மானிக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1958.07.15

திதி: பங்குனி மாத அபரபக்க தசமி (06.04.2021)

மறைவு 2019.03.30

அமரர். கணேச ஐயர் வீரமணி ஐயர்

(ஸ்தாபகர்:- ஸ்ரீ சக்தி மாடம் (நெல்லியடி), சந்துரு தளபாட விற்பனை நிலையம் (நெல்லியடி), ஸ்ரீ அம்பாள் ஜுவலர்ஸ் (நெல்லியடி)

ஆடம்பரம் இல்லாத வாழ்க்கை முறையும்
அன்றாடம் ஓய்வின்றி உழைப்பும்
ஞாயிறு தோறும் மாயவன் தரிசனம்
என வாழ்ந்து - அந்த
மாயவனிடமே சென்று சேர்ந்து விட்டீரே!

உமது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வல்லியானந்த பிள்ளையார், வல்லிபுர ஆழ்வார், மித்திர அம்மன், நாகர்கோவில் கருவூர் முருகனையும் பிரார்த்தனை செய்கிறோம்!!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-1890)

நெல்லியடி.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

# கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி. சிவபாதம் பரமேஸ்வரி

மலர்வு: 1952.05.02



உதிர்வு: 2021.04.05

எமது பாடசாலையின் அதிபர் திரு.சி.மோகஜீவன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி.பரமேஸ்வரி சிவபாதம் அவர்கள் 05.04.2021 திங்கட்கிழமை இறைபதம் அடைந்ததையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.


(C-1891)

பாடசாலைச் சமூகம்

மு/குரவில் தமிழ் வித்தியாலயம், உடையார்கட்டு தெற்கு, உடையார்கட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நில அளவீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து எழுதுமட்டுவாழில் மக்கள் போராட்டம்



(சாவகச்சேரி)

**தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் வடக்கு ஜே/334 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள தனியாருக்கு சொந்தமான 50 ஏக்கர் காணியை நில அளவைத் திணைக்களம் அளவீடு செய்வதற்கு பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் நேற்று திங்கட்கிழமை தமது கடும் எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தனர்.**

எழுதுமட்டுவாழ் வடக்கு 52 ஆவது படைத் தலைமையகம் அமைந்துள்ள தனியார் காணியே இவ்வாறு கையகப்படுத்தி இராணுவத்தினருக்கு வழங்கப்பட இருப்பதாகத் தெரிவித்து எழுதுமட்டுவாழ் வடக்கு 52 ஆவது படைத்தலைமையகம் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது காணியை அளவீடு செய்ய வந்த நில அளவைத் திணைக்களத்தினரை போராட்டக்காரர் காணியை அளக்க விடாது தடுத்தனர்.

இந்நிலையில் அங்கு வருகை தந்திருந்த தென்மராட்சி பிரதேச செயலர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்து தான் உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.


இருப்பினும் பிரதேச செயலரின் உறுதிமொழியையும் போராட்டக்காரர்களின் எதிர்ப்பையும் மீறி நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் இருவர் படை முகாமிற்குள் சென்றதனை அடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏ-9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முகாம் உள்ளே சென்ற நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் வெளியேற வேண்டும். மீண்டும் இவ்விடத்தை நாடக் கூடாது என்ற கோஷங்களை எழுப்பியவாறு சுமார் 30 நிமிடங்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுமக்களின் கடும் எதிர்ப்பை அடுத்து நில அளவைத் திணைக்கள அதிகாரிகள் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

அதனை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. குறித்த நில ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், சாவகச்சேரி பிரதேச சபை உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு போராட்டத்திற்கு வலுச் சேர்த்தனர். (5-4-18-30-33)

# 3 அம்சக்கோரிக்கையை முன்வைத்து மாவட்ட செயலகம் முன் போராட்டம்



(நல்லூர்)

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் மூன்று அம்ச கோரிக்கைகளை முன்வைத்து நேற்று மதிய உணவு இடைவேளை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ்.செயலகத்திற்கு முன்பாக தமது போராட்டத்தை ஆரம்பித்த இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர், வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் வரை பேரணியாக சென்று ஆளுநருக்கான மகஜரினை கையளித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்,

"அதிகாரிகளே பயிற்சிக் காலத்தினை நீடித்து வங்கி ஊழியர்களது உழைப்பினை சுரண்டுவதை உடனே நிறுத்துக"

பிரதமரின் உத்தரவிற்கமைய இலங்கை வங்கியின் பயிலுநர் ஊழியர்களை 2 வருடங்களில் நிரந்தரமாக்குக என வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு தமது போராட்டத்தை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வவுனியாவிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (5-4-33-299)

# மோட்டார் சைக்கிள் திருட்டு ஒருநாளில் மீட்ட பொலிஸார்

(நல்லூர்)

மருதனார்மடம் பகுதியில் நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் வீதியில் மோட்டார் சைக்கிளை வீதியில் நிறுத்திவைத்த உரிமையாளர், கடைக்குச் சென்றுள்ளார். கடையிலிருந்து திரும்பிய போது மோட்டார் சைக்கிளைக் காணவில்லை. இவ்விடயம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளரினால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனையடுத்து யாழ்.மாவட்ட புலனாய்வுப் பிரிவு முன்னெடுத்த விசாரணையில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் நேற்று மாலை உரும்பிராய்ப் பகுதியில் கைப்பற்றப்பட்டது. அதனைத் திருடிய சந்தேக நபரும் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன் மோட்டார் சைக்கிளும் பொலிஸில் பாரப்படுத்தப்பட்டது.(5-4-33)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில் நாளை 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ பிஷ்யேஸ்வரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் ''ஆலய தரிசனம்'' நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும். (5-4)

# இனந்தெரியாதோர் தாக்குதல்


(நல்லூர்)

யாழ்.கொழும்புத்துறை பகுதியில் வீடொன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. கொழும்புத்துறை விதானையார் வீதியில் உள்ள வீடொன்றின் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் நுழைந்த கும்பல் ஒன்றே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இத் தாக்குதல் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-4-33)



யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கணிதபாட ஆசிரியர்களான வி.குகநாதன், எஸ்.வி.பாலமுரளி ஆகியோர் இணைந்து எழுதிய கணிதம் தரம்-11 நூலானது வெளியீட்டுவிழாவிற்குப் பதிலாக அன்பளிப்புகளுடன் மாத்திரம் வெளிவந்தது. அந்தவகையில் கடந்த வெள்ளிக்கிழமையும் மற்றும் நேற்றுத் திங்கட்கிழமையும் நாயன்மார்கட்டில் உள்ள SOS சிறுவர் கிராமத்திற்கும் மாதகல் நுணசை வித்தியாலயத்திற்கும் ஒருதொகுதி நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

# கலைஞர்கள் விபரங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் 2021 ஆம் ஆண்டு "கலைஞர் விபரத் தொகுப்பு" எனும் மலர் வெளியீட்டினை மேற்கொள்ளப்படவுள்ளமையினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கலைஞர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் குறித்த விடயம் தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி யசோதா உதயகுமார் அறிவித்துள்ளார். (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபர்களின் தனிப்பட்ட தகவல் தொடர்பில் போலிக்குற்றம் சுமத்தினால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

**சமூக வலைத்தளங்களில் நபர்களின் தனிப்பட்ட தகவல்கள் தொடர்பில் போலிக்குற்றம் சுமத்துபவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.**

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக இவ்வாறான செயற்பாடு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ்க்குற்றம் என அறிவிக்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு அவசியமான திருத்தம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. நபர்களுக்கு சேறு பூசும் நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சமூக அமைப்பு, வல்லுநர்கள் உட்பட நிபுணர்கள் பலர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்கமைய புதிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (நி-4)

# ஆளும் கட்சிக்குள் இருக்கும் முரண்பாடு இயல்பானது-பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஆளும் கட்சிக்கும், பங்காளி கட்சிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளுக்கு. பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காணப்படும்.

வேறுபட்ட கொள்கையினை கொண்ட கட்சிகளை ஒன்றிணைத்து கூட்டணியமைத்துள்ள போது கருத்து வேறுபாடுகள் தோற்றம் பெறுவது இயல்பானது.

இவ்வாறான தன்மையே இடம் பெற்று முடிந்த பொதுத் தேர்தல் காலத்திலும் காணப்பட்டது என பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார். (நி-4)

# திருமணமான அழகு ராணியாக அறிவிக்கப்பட்டவரிடம் இருந்து அகற்றப்பட்டது கிரீடம்?

(கொழும்பு)

இலங்கையில் திருமணமான அழகு ராணி தெரிவிற்கான இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை நெளும்பொகுன அரங்கில் நடைபெற்றது.

இதன்போது போட்டியாளரான திருமதி புஷ்பிகா டி சில்வா வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

வெற்றியாளருக்கு ஷிராந்தி ராஜபக்ஷ, ரோஸி சேனநாயக்க மற்றும் சந்திமல் ஜெயசிங்க ஆகியோர் கிரிடத்தை சூட்டியுள்ளனர்.

இருப்பினும் ஒரு சில நிமிடங்களில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட புஷ்பிகா டி சில்வா விவாகரத்து பெற்றவர் எனவும் எனவே அவர் இந்த போட்டியின் வெற்றியாளராவதற்கு தகுதியற்றவர் எனவும் திருமணமான உலக அழகியான கரோலின் ஜூரி மேடையில் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து ஏற்கனவே இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்டவர் திருமணமான அழகு ராணியாக அறிவிக்கப்பட்டதுடன், புஷ்பிகா டி சில்வாவிடமிருந்து கிரீடம் அகற்றப்பட்டு குறித்த பெண்ணுக்கு அணிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நிகழ்வு முடியும் வேளையில் குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

மேலும் புஷ்பிகா டி சில்வா, இவ்விடயம் தொடர்பாக முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையிலேயே ஏற்பாட்டுக்குழு, புஸ்பிகாவுக்கு இந்த பட்டத்தை மீள வழங்க தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது. (நி-4)

# மொஹான் பீரிஸின் பதவிநீக்கம் சட்டவிரோதமானது

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான பீரிஸ் பதவி நீக்கப்பட்டமை சட்ட ரீதியானது இல்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த செயற்பாட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் இதன்போது தெரிவித்தார். (நி-4)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 47 செவ் 1 சூரி 10 ல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: College, ஆசிரியை (அரச)
எதிர்பார்ப்பு: சாதரண படித்த உத்தியோகம் உள்ள பெண்
தொ.இ: B/11720

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 19 ¼ செவ் 2 சூரி 4 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L, வியாபாரம்
எதிர்பார்ப்பு: படித்த மணமகள் பெண்
தொ.இ: B/11721

பிறப்பு: 1986 இந்துநட்சத்திரம்: உத்தாரடம்
கி.பா: செவ் 8 சூரி 11 ல
தகைமை/தொழில்: Hospitality & Business Management.
எதிர்பார்ப்பு: சாதரண படித்த பெண். உள் நாடு. வெளி நாடு
தொ.இ: B/11723

பிறப்பு: 1981 இந்துநட்சத்திரம்: திருகோணம்
கி.பா: 29 ¼ செவ்.சூரி 10 ல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: IT, B Teck. தனியார் கெம்பனி மனேஜர்
எதிர்பார்ப்பு: சாதரண படித்த பெண். உள் நாடு மட்டும்.
தொ.இ: B/11725

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1977 இந்து நட்சத்திரம்: சதயம்
கி.பா: 16 ½ செவ் 2 சூரி 5 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:. பட்டதாரி B.COM
தொழில் - உடுவில் பிரதேச செயலகம்
எதிர்பார்ப்பு: அரச தொழில், நிறுவனத் தொழில், சொந்தக்கடை, உள் நாடு மட்டும்.
தொ.இ: G/2863

பிறப்பு: 1979 இந்து நட்சத்திரம்: பூரம்
கி.பா: 65 ½ செவ்.சூரி 12 ல்
உயரம்: 5.3
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வியாபாரி அல்லது உத்தியோகத்தர், அரச தனியார், சொந்தத் தொழில், வெளி நாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: G/2886

பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 54 ¼ செவ் 3 சூரி 12ல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: ICT
எதிர்பார்ப்பு: அழகான நற்பண்புள்ள பெண், வெளி நாடு ஆயின் லண்டன், கனடா, நோர்வே, டென்மார்க்,சுவிஸ்.
தொ.இ: G/2900

பிறப்பு: 1981 இந்துநட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 5 ¼ செவ் 2 சூரி 3 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு: அரச தனியார் தொழில், விவாகரத்தும் ஏற்கப்படும், மணமகள் விவாகரத்து பெற்றவர், வெளி நாடும் எதிர்பார்க்கப்படும்.
தொ.இ: G/2902

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## பதவி வெற்றிடம்
### முகாமைத்துவ உதவியாளர்
( இருபாலாரும் )

**தகைமை**

- க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்,
- 01.04.2021 இல் 25 வயது பூர்த்தியாகி இருத்தல்,
- யாழ். நகர மையத்தில் இருந்து 6 Km சுற்றளவிற்குள் நிரந்தர வசிப்பிடத்தைக் கொண்டிருத்தல்.

**மேற்குறிப்பிட்ட கட்டாய தகைமைகளுடன்**

- கனினி தமிழ் ரைப்பிங் தெரிந்திருத்தல்.
- ஆங்கிலம், சிங்களம் பேசும் ஆற்றல்

என்பன மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

தகைமையும் விருப்பமும் உள்ளவர்கள் சுயவிபரம் அடங்கிய (தொ.பே இலக்கம் உட்பட) விண்ணப்பத்தை,

**பொது முகாமையாளர்,
வலம்புரி,
இல. 3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் இந்திய றோலர்களின் வருகையினைக் கட்டுப்படுத்த வேண்டும்

(அக்கராயன்)

**முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய றோலர்களின் அத்துமீறிய செயற்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் என வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொரு ளாளரும் முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவருமான அ.மரியராசா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு கடற்பரப்பில் 2014 ஆம் ஆண்டில் இந்திய றோலர்களின் வருகை அதிகரித்த போது அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வரை மனுக்கள் கையளித்து இந்திய றோலர்கள் கட்டுப்படுத்தப்பட்டன.

2015 இலும் இந்திய றோலர்களின் வருகை தொடர்பாக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம் மனுக் கையளித்து றோலர்களைக் கட்டுப்படுத்தினோம். இந்திய றோலர்களின் வருகையினை கட்டுப்படுத்த வேண்டும் என்ற தீர்மானம் பாராளுமன்றத்தில் எடுக்கப்பட்டு சட்டமாக வர்த்தகமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சட்டத்தினை நடைமுறைப்படுத்தாமல் நடவடிக்கைகள் எடுக்காததன் காரணமாக முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து இரண்டு மைல் தொலைவில் இந்திய றோலர்கள் நாள்தோறும் அத்துமீறிய தொழிலில் ஈடுபடுகின்றது.

தற்போதைய அரசாங்கம் இந்திய றோலர்களைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ள சட்டத்தினை பயன்படுத்த வேண்டும்.

இந்திய றோலர்களின் அத்துமீறிய தொழில் தொடருமானால் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிக மோசமாக பாதிக்கப்படும் எனவும் கடற்றொழிலாளர்களின் நலன் கருதி இலங்கை அரசாங்கம் இந்திய றோலர்களைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். (5-4-350)

## மரண விசாரணை அதிகாரிகள் பற்றாக்குறை சிரமங்களுக்குள்ளாகும் மக்கள்

(அக்காராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக இறப்புகள் நிகழ்கின்ற போது கூடுதலான உடல்கள் முல்லைத்தீவு பொது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றே மரண விசாரணைகள் நடைபெறுகின்றன.

இதன் காரணமாக உடல்கள் வீட்டிற்கு எடுத்து வருவதில் தாமதங்கள் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உதாரணமாக மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவுகளில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் இல்லை.

திடீர் மரண விசா ரணை அதிகாரிகள் இருந்தால் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் வைத்து விசாரணைகளை நிறைவு செய்ய முடியும்.

ஆனால் திடீர் மரண விசாரணை இப் பணியில் எவரும் இல்லாததன் காரணமாக உடல்கள் முல்லைத்தீவிற்குக் கொண்டு செல்லப்பட்டே விசாரணைகள் நடைபெறுகின்றன.

இதன் காரணமாக உடல்களை வீட்டிற்கு எடுத்து வருவதில் நெருக்கடி மற்றும் பண விரயம் என்பன கூடுதலாக ஏற்படுவதாக மக்களினால் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் திடீர் மரண விசாரணை அதிகாரிகளுக்கு நிலவுகின்ற பற்றாக் குறையினை நீக்குவதற்கு உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்களினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட் டங்களில் தீர்க்க முடியாத பிரச்சினையாக இத் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் பற்றாக்குறை பிரச்சினை காணப் படுகிறது. (5-4-350)

## ஆட்டோ-மோ.சைக்கிள் விபத்து; இருவர் படுகாயம்

(நெளுக்குளம்)

வவுனியா குருமன்காடு பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை முச்சக்கர வண்டி மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில் குறித்த விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்து சம்பவித்ததும் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் காயமடைந்த நிலையில் துவிச்சக்கர வண்டியுடன் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இவ்விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-4-299-250)



வேதாள வெங்காயம் அறுவடை விழா கிளிநொச்சி மாவட்டத்தில் விநாயகபுரம் பகுதியில் நேற்று நடைபெற்றது. இந் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

(படம்: தேவானந்தன், யதுபாஸ்கரன்)

## பொறுப்பற்ற சிலரின் செயற்பாடுகளை கவனிப்பார்களா பொறுப்பானவர்கள்?



(நெளுக்குளம்)

வவுனியாவின் பிரதான வீதியோரங்களில் வீசப்படும் கழிவுகளால் சுகாதார சீர்கேடான நிலை உருவாகியுள்ளதுடன் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

குறிப்பாக பண்டாரிக்குளம், மற்றும் வைரவபுளியங்குளம் குளக்கட்டு வீதிகள், ஈச்சங்குளம் பிரதான வீதி, பூந்தோட்டம் சாந்தசோலை வீதி, கல்வியியற்கல்லூரி வீதி, சிதம்பரபுரம் ஆகிய வீதிகளி லும், வடிகால் ஓரங்களிலும் பொது மக்களால் அதிகப்படியான கழிவுகள் வீசப்பட்டு வருகின்றன.

கழிவுகள், அப்பகுதிகளில் வீசப்படுவதால் வீதி எங்கும் துர்நாற்றம் வீசுவதுடன், அவ் வீதிகளால் அசௌகரியத்துடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அங்கு வீசப்படும் கழிவுகள் ஓடும் நீரினாலும், விலங்குகள், பறவைகளால் காவிச் செல்லப்பட்டு, வீதிகளில் பரவிகிடக்கின்றன. இதனால் சுகாதார சீர்கேடான நிலைமை உருவாகியுள்ளதுடன் தொற்றுநோய் பரவக்கூடிய அபாயமும் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதிகளை சேர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் வருகை தரும் சில நபர்களே தொடர்ச்சியாக அப்பகுதிகளில் குப்பைகளை வீசி சீர்கேட்டை ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து உள்ளூராட்சி சபைகள் கவனம் செலுத்தி கழிவு முகாமைத்துவத்தை சரியான முறையில் ஏற்படுத்த வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கைவிடுப்பதுடன், இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கண்காணிக்கப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்எனவும்கேட்டுக் கொள்கின்றனர். (5-4-299)

## போக்குவரத்து சேவை மீண்டும் ஆரம்பம்

(அக்காராயன்)

கிளிநொச்சி பூநகரி அரசபுரம் ஊடான இலங்கை போக்கு வரத்து சபையின் பேருந்து சேவை நான்கு மாதங்களுக்குப் பின்னர் நேற்று மீண்டும் ஆரம்பமானது.

கடந்த மார்கழி மாதத்தில் அரசபுரம் வீதியில் மூன்று பெருங்குழிகளில் மழை வெள் ளம் தேங்கியதன் காரணமாக பேருந்து சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

பூநகரி பிரதேச சபையினர் அரசபுரம் வீதியில் உள்ள மூன்று குழிகளையும் மூடி வீதியினை சீர் செய்து இருப்ப தன் காரணமாக நான்கு மாதங்களுக்குப் பின்னர் அரசபுரம் செக்காலை வழியாக இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை நேற்று ஆரம்பமாகியுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து பயணத்தினைத் தொடங்கும் பேருந்து பரந்தன், பூநகரி, வாடியடி ஊடாக ஏ-32 சாலையில் பயணித்து அரசபுரம், செக்காலை வழியாக முக்கொம்பனை வந்தடையும்.(5-350)

## ஆயருக்கு அஞ்சலி செலுத்த மன்னாரில் பூரண கதவடைப்பு

(மன்னார்)

மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையுடைய பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் முகமாக நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்டத்தில் பூரண கடையடைப்பும் அதேநேரம் வடக்கு -கிழக்கு முழுவதிலும் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகள்.வீடுகள் எங்கும் கறுப்பு மற்றும் வெள்ளை நிற கொடிகள் பறக்க விடப்பட்டு கடைகள் அனைத்தும் மூடப்பட்டு இறந்த ஆயருக்கு இறுதி மரியாதை மன்னார் மக்களால் செலுத்தப்பட்டது. ஆயர்களின் கூட்டு திருப்பலியின் பின்னர் ஆயரின் பூதவுடல் புனித செபஸ்தியார் ஆலயத்தினுள் அடக்கம் செய்யப்பட்டது. (5-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

**06.03.2021**
**பங்குனி 24, செவ்வாய்க்கிழமை,**
**நவமி காலை 6.34 மணிவரை**
**தசமி பின்னிரவு 5.40 மணிவரை**
**திருவோணம் பின்னிரவு 5.48 மணிவரை**
**சுபநேரம் 10.38-12.08 மணிவரை**
**இராகுகாலம் 3.08-4.38 மணிவரை**
**சந்திராஷ்டமம்: திருவாதிரை**

**வளவன்**


மேஷம்

யோசிக்காமல் செய்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.


ரிஷபம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.


மிதுனம்

கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், வேலைச்சுமை அதிகரிக்கும் வாய்ப்புண்டு, உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.


கடகம்

நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


சிம்மம்

பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.


கன்னி

மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளிப்போட்ட காரிய மொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும் நாள்.


துலாம்

செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன சுகமுண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், சுப விரயங்கள் கூடும் நாள்.


விருச்சிகம்

சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


தனுசு

தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.


மகரம்

தொட்ட காரியங்களில் வெற்றிபெற அம்பிகையை வழிட வேண்டிய நாள், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.


கும்பம்


சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


மீனம்

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**இன்று வீழ்பவன் நாளை எழுவான்**

# ஒரு ஏக்கர் கஞ்சா பயிர் இராணுவத்தால் முற்றுகை



(கதிர்காமம்)

கதிர்காமம் வெஹரகல காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் பயிடப்பட்ட கஞ்சா விளைச்சலை இலங்கை இராணுவத்தினர் அண்மையில் முற்றுகையிட்டுள்ளனர்.

வனவிலங்கு அதிகாரிகள் மற்றும் பொலிஸாருடன் இணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சட்டவிரோத கஞ்சா சாகுபடியை அழித்ததாக இராணுவம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# இந்த வருடம் மட்டும் சுமார் 10 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள்

(கொழும்பு)

கடந்த ஜனவரி 21 ஆம் திகதி சுற்றுலாப் பயணிகளுக்காக மீளவும் விமானநிலையம் திறக்கப்பட்டதிலிருந்து, சுமார் 10 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்ததாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது. அதன்படி, கஜகஸ்தான், ஜேர்மன், ஐக்கிய இராச்சியம், உக்ரைன், ரஷ்யா, இந்தியா, சீனா, சுவிட்சர்லாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து மொத்தம் 9,629 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

புதிய விமான நிறுவனங்களை ஈர்ப்பதற்கும், தற்போதுள்ள விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் தூதரகங்கள் மற்றும் விமான நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். (நி-4)

## அதிக தொற்றாளர்கள் கொழும்பில் அடையாளம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட 141 கொவிட் தொற்றாளர்களில் பெரும்பான்மையானோர் கொழும்பு மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என கொவிட்-19 வைரஸ் பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (நி-4)

# தேங்காய் எண்ணெய் மீண்டும் மலேசியாவுக்கு

(கொழும்பு)

நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள எப்லடொக்சின் அடங்கியுள்ள தேங்காய் எண்ணெயினை மீண்டும் மலேசியாவுக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எப்லடொக்சின் அடங்கியுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள தேங்காய் எண்ணெய் கொள்கலன்களை இன்று செவ்வாய்க்கிழமை மலேசியாவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுங்க திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-4)

# அநாதரவாக காணப்பட்ட பெட்டியால் பதற்றம்

(கொழும்பு)

திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான வகையில் இரும்பு பெட்டியொன்று கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டதால் நேற்று திங்கட்கிழமை காலை அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்தின் மூதூர் மற்றும் கிண்ணியா ஆகிய பகுதிகளுக்கான பேருந்துகள் தரித்து நிற்கும் இடத்திற்கு அருகாமையில் குறித்த பெட்டியானது கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

அதனை அடுத்து அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. விசேட அதிரடிப்படையினரது குண்டு செயலிழக்கும் அணியினர் சம்பவ இடத்திற்குச் சென்று பலத்த பாதுகாப்புடன் குறித்த பெட்டியைத் திறந்து பார்த்தனர். குறித்த பெட்டியானது இராணுவ சிப்பாய் ஒருவருடையது என அடையாளம் காணப்பட்டது. (நி-4)

## குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு நளின் பண்டார

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்று காலை குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பில் விபரங்களை தெரிவிப்பதற்காக அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (நி-4)

# ரஞ்சனின் ரிட் மனு நிராகரிப்பு

(கொழும்பு)

தனது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதை தடுக்கும் வகையில் எழுத்தாணை ஒன்றினை பிறப்பிக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தாக்கல் செய்த ரிட் மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயாதுன்னே கொரேயா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாமே இந்த உத்தரவினை பிறப்பித்தது.

நீதிமன்றின் இந்த உத்தரவின் காரணமாக ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்றில் தனது ஆசனத்தை இழப்பதற்கான வாய்ப்புகளும் உருவாகியுள்ளது. (நி-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆந்தைகளின் மொழி

"அது உளறவில்லை! சரியாகத்தான் சொல்கிறது. நீங்கள் இருக்கும் தைரியத்தில்தான் அது அப்படிப் பேசுகிறது!" என்றார் பீர்பால். "சரிதான்! ஆந்தைதான் உளறுகிறது என்று நினைத்தால் நீயும் உளறுகிறாயே!" என்றார் அக்பர்.

"நான் உளறவில்லை, பிரபு! ஆந்தையும் உளறவில்லை! நீங்கள் ஒரு முறை வேட்டையாட வந்தாலே, காட்டில் உள்ள மிருகங்கள் அனைத்தும் கொல்லப்பட்டு விடுகிறது.

அதுபோல்இது வரை நீங்கள் இருபது காடுகளை மிருகங்களேயில்லாமல் செய்து விட்டீர்கள். இன்னும் அடுத்த ஆறு வாரத்தில் நீங்கள் இருபது முறை வேட்டையாடினால், மீதியுள்ள இருபது காடுகளும் காலியாகிவிடும்! அந்த தைரியத்தில்தான் அந்த ஆந்தை அவ்வாறு கூறுகிறது!" என்றார் பீர்பால்.

பளீரென முகத்தில் அறைந்ததுபோல் இருந்த பீர்பாலின் விளக்கம் அக்பரை மௌனமாக்கி விட்டது. தன் செய்கைக்கு முதன்முதலாக வெட்கித் தலை குனிந்த அக்பர், "பீர்பால்! என் கண்களை நீ இன்று திறந்து விட்டாய்! என்னுடைய மகிழ்ச்சிக்காக காட்டில் வாழும் மிருகங்களைக் கொன்று குவிப்பது ஈனமான செயல் என்று புரிந்து கொண்டேன். இன்று முதல் வேட்டையாடுவதை நிறுத்தி விடப் போகிறேன்" என்றார் அக்பர்.

பீர்பாலுக்குத் தன் செவிகளையே நம்ப முடியவில்லை. இத்தனை எளிதாக அக்பரின் மனம் மாறும்என்று அவர்நினைக்கவில்லை.



"பீர்பால்! என்ன அப்படிப் பார்க்கிறாய்? நான் இப்போது சொன்னதைக் கேட்டு அந்த ஆந்தை என்ன சொல்கிறது என்று எனக்குச் சொல்!" என்றார் அக்பர்.

"சக்கரவர்த்தியின் மனம் மாறிவிட்டதால், இனி என்னால் மிருகங்களற்ற காடுகளை வரதட்சணையாக அளிக்க முடியாது என்று அது கூறுகிறது!" என்று பீர்பால் கூறவும், அக்பர் பலமாகச் சிரித்தார்.

(முற்றும்)

# மகாபாரதம்




வழிநெடுக மக்கள் வாய் மூடிப் பார்த்திருந்தனர். அவைக்கு இழுத்து வரப்பட்ட பாஞ்சாலி விம்மி அழுதாள்.

பாண்டவரை நோக்கி "அம்மி மிதித்து அருந்ததி காட்டி வேதச் சுடர்த்தீ முன் விரும்பி மணம் செய்து கொண்டீரே. இன்று இதைப்பார்த்துக் கொண்டு நிற்கிறீர்களே. இது தகுமா" என்றாள்.

பார்த்தனும் பீமனும் செயலற்று இருந்தனர். தருமர் தலை குனிந்தார்.

பாஞ்சாலி மேலும் கூறுகிறாள் "இப்பேரவையில் சான்றோர் பலர் இருக்கின்றனர். வேத விற்பன்னர்கள் உள்ளனர். வேறுபல சிறப்புமிக்க மேலோர் உள்ளனர்.

ஆயினும் வெஞ்சினம் கொண்டு யாரும் வாய்திறக்கவில்லையே" என்றவள் துச்சாதனனை நோக்கி அற்ப புத்தியுடையவனே மன்னர்அவையில் என்னை பிடித்து இழுத்து ஏசு கிறானே. உன்னைப் பார்த்து "நிறுத்துடா" எனக் கூற அவையில் யாரும் இல்லையே" எனப் புலம்பினாள்.

வெறிகொண்ட துச்சாதனனோ "நீ இப்போது வெறும் தாதி" என தீதுரைகள் பல சொன்னான்.

கர்ணன் சிரிக்க, துரியோதனன் ஆணவச்சிரிப்பு சிரிக்க, சகுனி மனம் மகிழ, அவையினரோ வாளாயிருக்க, பிதாமகன் பீஷ்மரோ எழுந்து பேச ஆரம்பித்தார். பீஷ்மர் எழுந்து திரௌபதிக்கு கூற ஆரம்பித்தார். "தருமன் சூதாட்டத்தில் உன்னை இழந்து விட்டான்.

நீயோ அவன் செய்கையை மறுக்கின்றாய். சூதிலே சகுனி தருமனை வென்றான். பின் உன்னை பந்தயமாக்கி தருமன் இழந்தான்.

அப்படி தருமன் தன்னை இழந்தபின் உன்னை வைத்து ஆடியது குற்றம் என்கிறாய். விதிப்படி அது நியாயம்.

ஆனால் பழைய காலத்தில் ஆணுக்குப் பெண் நிகரானவள் என்றேகருதினர். ஆனால் பிற்காலத்தில் அக்கருத்து மாறிவிட்டது.


இப்போதுள்ள நீதி சாஸ்திரங்களை நோக்குகையில் ஆணுக்கு இணையாகப் பெண்ணைக் கருதமுடியாது. ஒருவன் தன் தாரத்தை தானம் என வழங்கிடலாம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷியாவில் பாரிய வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு திண்டாடும் பொதுமக்கள்

- 60 இற்கு மேற்பட்டவர்கள் பலி
- 9 பேர் காயம்
- 27 பேரைக் காணவில்லை
- பல வீடுகள் சேதம்





(ஜகார்த்தா)

**இந்தோனேஷியா மற்றும் திமோர் லெஸ்டே ஆகியவற்றில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு மற்றும் நிலச்சரிவு காரணமாக 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.**

அத்துடன் இந்த அனர்த்தத்தினால் ஆயிரக்கணக்கான வீடுகளும், பாலங்கள் மற்றும் வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கிழக்கு இந்தோனேஷியாவின் புளோரஸ் தீவிலிருந்து அண்டை நாடான திமோர் லெஸ்டே வரை இந்த பாதிப்பு நீண்டு சென்றுள்ளது.

வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் சிக்குண்டு பலர் காணாமல்போயுள்ள நிலையில் அவர்களை மீட்பதற்கான முயற்சிகளும் தொடர்ச்சியாக மீட்பு படையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

மழைக் காலங்களில் இந்தோனேசியா முழுவதும் வெள்ளம் மற்றும் அபாயகரமான நிலச்சரிவுகள் பொதுவான நிகழ்வாகும். இது வழக்கமாக நவம்பர் முதல் மார்ச் வரை நடைபெறும். (நி-4-8)

## இந்தியாவில் விஸ்வரூபம் எடுத்த கொரோனா

(டில்லி)

இந்தியாவில் நேற்று முன்தினம் மட்டும் 103,558 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 478 உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.

இது நாட்டின் மொத்த கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையை 12,589, 067 ஆகவும், இறப்பு எண்ணிக்கை 165,101 ஆகவும் உயர்த்தியுள்ளதாக இந்திய மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் நேற்று திங்கட்கிழமை காலை தெரிவித்துள்ளது.

2020 பெப்ரவரி ஆரம்பத்திலிருந்து ஒரேநாளில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் நேற்று முன்தினமே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளனர். (நி-4-8)

## பேஸ்புக் பயனர்களின் தகவல்கள் இணையத்தில் கசிந்துள்ளது- அதிர்ச்சித் தகவல்

(ஜெருசலேம்)

உலகம் முழுவதும் 533 மில்லியன் பேஸ்புக் பயனர்களின் கணக்கு விவரங்கள் இணையத்தில் கசிந்திருக்கும் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேலின் இணைய வழிக் குற்றங்கள் தொடர்பான உளவு நிறுவனத்தின் துணை நிறுவுநர் ஆலன் கால் என்பவர் பேஸ்புக் பயனாளர்கள் 50 கோடி பேரின் தகவல்கள் இணையத் தளங்களில் இலவசமாக கிடைப்பதாக அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்தத் தகவல்களை கடந்த ஜனவரி மாதம் முதல் இணையத் தளங்களில் பெறக்கூடியதாக உள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், அது தொடர்பான ஆதாரங்களையும் வெளியிட்டுள்ளார்.

இந்த தகவல்களை ஆலனுடன் இணைந்து பிசினஸ் இன்சைடர் நிறுவனம் பரிசோதித்ததில் அவை உண்மையான தகவல் என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை பேஸ்புக் வழக்கம் போல் மறுத்துள்ளது. 'தற்போது வெளியாயிருக்கும் தகவல்கள் பழையவை. இவை, 2019 ஆம் ஆண்டிலேயே கசிந்ததாக கூறப்பட்டு, அந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுவிட்டது,' என பேஸ்புக் கூறியுள்ளது. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**
**உயிரிழப்பு :-2,865,821**
**தொற்று :-131,905,979**
**(நேற்றைய நிலவரம்)**

## இராணுவ ஆட்சியை எதிர்த்து முட்டை போராட்டம்


(நைபியிடவ்)

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக தினந்தோறும் பல்வேறு வழிமுறைகளில் போராட்டம் நடத்தி வரும் அந்த நாட்டு மக்கள் நேற்று முன்தினம் உயிர்த்த ஞாயிறு முட்டை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டக்காரர்கள் உயிர்த்த ஞாயிறு முட்டைகள் மீது ஆட்சிக்கவிழ்ப்புக்கு எதிரான படங்களை வரைந்து தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இது ஒருபுறமிருக்க பூக்கள் போராட்டம் என்கிற பெயரில் மற்றொரு போராட்டத்தையும் போராட்டக்காரர்கள் முன்னெடுத்தனர். அதன்படி இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட போராட்டக்காரர்களின் நினைவாக வீதிகளில் பூங்கொத்துகளை வைத்து போராட்டம் நடத்தினர். (நி-4-8)

## படகு கவிழ்ந்து 12 பேர் பலி



(பீஜிங்)

சீனாவின் கிழக்கு மாகாணம் ஜெஜி யாங்கில் உள்ள நிங்போ ஜுஷான் துறைமுகத்தில் இருந்து 100 நாட்டிக்கல் மைல் தொலைவில் கடலில் நேற்று முன்தினம் காலை மீன்பிடி படகு ஒன்று மீன் பிடிப்பில் ஈடுபட்டிருந்து.

எதிர்பாராதவிதமாக அந்த படகு திடீரென கடலில் கவிழ்ந்தது. இதில் படகில் இருந்த 20 பேரும் நீரில் மூழ்கினர்.

12 பேர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்தனர். அவர்களது உடல்களை மீட்புக் குழுவினர் மீட்டனர்.

அதேசமயம் நீரில் தத்தளித்துக்கொண்டிருந்த 4 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

மேலும் இந்த விபத்தில் 4 பேர் மாயமாகி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4-8)

## இளவரசர் உசேன் வீட்டுக்காவலில் சிறைவைப்பு

(அம்மான்)

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்றான ஜோர்டானில் கடந்த 1999 ஆம் ஆண்டு முதல் மன்னராக இருந்து வருபவர் 2 ஆம் அப்துல்லா.

ஜோர்டானில் ஆட்சியை கவிழ்க்க முயன்ற குற்றச்சாட்டில் முன்னாள் பட்டத்து இளவரசர் ஹம்ஸா பின் உசேன் கைது செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தான் வீட்டுக்காவலில் சிறை வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள ஹம்ஸா பின் உசேன் ஆட்சியாளர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார். (நி-4-8)

## உயிரிழந்த வீரர்களின் எண்ணிக்கை உயர்வு



(டில்லி)

சத்தீஸ்கரில் கடந்த சனிக்கிழமை மாவோயிஸ்ட்டுகளுடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்த இந்திய பாதுகாப்பு வீரர்களின் எண்ணிக்கையானது 22 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையின் போது காணாமல் போன வீரர்களில் 17 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன.

இதன்மூலம் மோதலில் மொத்தம் 22 பேர் கொல்லப்பட்டவர்கள் என சத்தீஸ்கரின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

மேலும் சம்பவம் நடந்த இடத்திலிருந்து 15 மாவோயிஸ்ட்டுகளின் உடல்களும் மீட்கப்பட்டுள்ளன. (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடம் நெருங்குகிறது மக்களே அவதானம்!

## மீண்டும் மீண்டும் எச்சரிக்கும் பொலிஸார்

(கொழும்பு)

**தமிழ் - சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களுக்குத் தயாராகும் வேளையில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளைக் கடைப்பிடிப்பதுடன் கொள்ளையர்களிடமிருந்து பொருட்களைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பிலும் மக்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

இது தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த அவர், தமிழ் - சிங்கள புதுவருடப் பிறப்புக்கு இன்னும் ஒரு வார காலமே உள்ளது. இந்நிலையில் மக்கள் தற்போது புதுவருட கொண்டாட்டத்துக்கான பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

கொவிட் - 19 வைரஸ் பரவல் இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத நிலையில் மக்கள் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும்.

வீட்டை விட்டு வெளியேறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முகக்கவசம் அணிவதுடன் கைகளைச் சுத்தம் செய்து கொள்ளல், சமூக இடைவெளியை பேணுதல் போன்ற ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுவதுடன் பொதுமக்கள் அதிகமாக உள்ள பகுதிகளுக்குச் செல்வதையும் தவிர்த்துக் கொள்வது சிறந்ததாகும்.

இதேவேளை இந்தக் காலப் பகுதியில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் மற்றும் பல்வேறு குற்றச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருபவர்களினால் மேற்கொள்ளப்படும் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அதற்கமைய வீட்டை விட்டு வெளியேறும் போது கொள்ளையர்களிடமிருந்து தமது பெறுமதிமிக்க பொருட்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன்போது தங்க நகைகள் அணிந்து செல்பவர்கள் மேலும் அவதானத்துடன் இருக்க வேண்டும். பெண்கள் பயன்படுத்தும் கைப் பைகளையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

கொள்ளையர்கள் பல்வேறு முறைகளைக் கையாண்டு அவற்றைக் கொள்ளையிடுவதற்கு வாய்ப்புள்ளது.

மேலும் மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் உட்பட வாகன கொள்ளைகளும் தற்போது பதிவாகி வருகின்றன. அதனால் வாகனங்களில் செல்பவர்கள் தங்களது வாகனங்களை நிறுத்திவிட்டுச் செல்லும்போது அதனைப் பாதுகாப்பாக வைத்துச் செல்ல வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-4)

### சீன தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

(கொழும்பு)

சீனாவிலிருந்து பெறப்பட்ட கொரோனாத் தடுப்பூசி வழங்கும் பணி ஆரம்பம் என பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

இருப்பினும் இந்தத் தடுப்பூசி முதலில் இலங்கையில் உள்ள சீன நாட்டினருக்கு வழங்கப்படும். (நி-4)

## மக்களின் உயிருடன் விளையாட வேண்டாம்

### சீன தடுப்பூசி குறித்து ஜே.வி.பி.

(கொழும்பு)

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக நாட்டு மக்களின் உயிருடன் அரசாங்கம் விளையாடிக் கொண்டிருக்கிறது.

அதன் காரணமாகவே உலக சுகாதார ஸ்தாபனம், தேசிய மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகார சபை மற்றும் தடுப்பூசி தொடர்பான விசேட நிபுணர்கள் குழு என்பன அனுமதி வழங்காத சினோபார்ம் தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளால் தடுப்பூசி விடயத்தில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இழக்க நேரிடுமாயின் கொவிட் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அது பாரிய அச்சுறுத்தலாக அமையும். எனவே அரசாங்கம் மக்களின் உயிருடன் விளையாட வேண்டாம் என்று கேட்டுக் கொள்வதாகவும் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2275

**தனஞ்சய்**

குப்பைகள் இல்லாத ஒரே இடம் குழந்தைகளின் மனது...



**சுலோக்சனா**

நெற் ஸ்லோவா இருக்குன்னு நெற்வேர்க்காரனுக்கு போன் பன்னா...



உலகின் அதிவேக 4ஜி ஸ்பீட் நெற்வேர்க்கிற்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம்னு சொல்றான்...

**கயல்விழி**

பிற உயிர்களின் துயரம் அறிந்தவனே உழைப்பாளி...




**கார்மேகன்**



வயதுக்கும் திறமைக்கும் சம்பந்தம் இல்லை...

**தயா**

சில மனிதர்கள் கற்றுத்தரும் பாடங்கள் புத்தகத்திலும் இருப்பதில்லை...



**கோமதி**

ஸ்கூல் பிரேயர்ல பாட்டுக்கு வாயசைச்சது தான்...



நாம பண்ண முதல் டிக்டாக்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் ஊடகங்களுக்கு அனுமதியில்லை

## வெளியானது சுற்றுநிருபம்

(கொழும்பு)

*மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போது, செய்தி சேகரிப்பதற்காக ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்காதிருக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.*

தேசிய பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்தம் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரான ஜெனரல் கமால் குணரத்னவால் இது தொடர்பான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டங்கள் தொடர்பான செய்திகளை அறிக்கையிட வேண்டுமாயின், ஊடயவியலாளர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அல்லது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முடிவடைந்த பின்னர்,. அந்தக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் தனியாகக் கலந்துரையாடித் தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று குறித்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்ட மற்றும். பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்தச் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது. அதில் ஊடகங்களுக்கு விடயங்களை அறிக்கையிடல் என்ற தலைப்பின் கீழ் குறித்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (நி-4)

# 69 லட்சம் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக அரசு

## கம்மன்பில சீற்றம்



(கொழும்பு)

69 இலட்சம் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக அரசு செல்கின்றது என்று தெரிவித்த அமைச்சர் உதய கம்மன்பில, அரசுக்குள் நாங்கள் ஒரு போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என்பது உண்மைதான் எனவும் ஒப்புக் கொண்டார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நிகழ்வொன்றில் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"அரசுக்குள் ஒரு உள் பிளவு இருக்கின்றதா? என்று சிலர் எங்களிடம் கேட்கின்றார்கள். நாங்கள் அரசுக்குள் ஒரு போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம் என்பது உண்மைதான். ஆனால், அந்தப் போராட்டம் அரசை அழிப்பதற்கான போராட்டம் அல்ல. மாறாக மக்கள் அளித்த ஆணை மற்றும் அவர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை காப்பாற்றுவதற்கான போராட்டத்தையே நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம்.

மக்களின்ஆணையை நாங்கள் மதிப்பது என்றால் எங்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களின் ஆணையை மதிக்க வேண்டும்.

பெறப்பட்ட ஆணையை நாங்கள் பாதுகாக்கின்றோம் என்றால், அரசமைப்பின் 20 ஆவது திருத்தம் அது வந்த வழியில் வந்திருக்காது. கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்குக் கொடுக்கும் எண்ணம் கூட இந்த அரசின் தலைவர்களின் மனதில் வந்திருக்காது. அவர்கள் ஆணையைப் பாதுகாக்கின்றார்களானால், நமது அரசியல் தலைவர்கள் சட்டம், ஒழுங்கைத் துன்புறுத்தும் முடிவுகளை எடுக்க மாட்டார்கள்.

இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டுவர பணியாற்றிய முன்னோடிகள் என்ற வகையில், அவர்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களின் விருப்பத்துக்கு எதிராகச் செல்லும் அரசின் தவறுகளைச் சரிசெய்வது எமது கடமை" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# உலகின் மிகப்பெரிய எண்ணெய் ஆராய்ச்சிக் கப்பல்கள் அம்பாந்தோட்டை துறைமுகத்தில்

(கொழும்பு)

உலகின் மிகப் பெரிய இரண்டு எண்ணெய் ஆராய்ச்சிக் கப்பல்கள் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தினை வந்தடைந்துள்ளன.

இதனால் உள்நாட்டு துறைமுக சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைக்கவுள்ளன.

பனாமா நாட்டின் கொடியுடன் பயணத்தினை மேற்கொள்ளும் வெஸ்ட் கரினா மற்றும் வெஸ்ட் பொலாரிஸ் ஆகிய இரண்டு எண்ணெய் ஆராய்ச்சிக் கப்பல்களுமே அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தினை வந்தடைந்துள்ளது.

நீண்டகாலத்திற்கு உபகரணங்களை திருத்துதல், திருத்த சேவைகளுக்காக ஒன்றரை வருடகாலத்திற்கு அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தில் நங்கூரமிட்டு இந்த இரண்டு கப்பல்களும் சேவைகளை பெற்றுக் கொள்ளவுள்ளது.

இதனூடாகக்கப்பல்களை பராமரித்தல், ஊழியர்களை மாற்றுவதற்கு தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல், ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் கழிவுகளை அகற்றுதல்போன்றசேவைகள் விசேடமானவையாகும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கைமாறும் கருத்துக்கள்!

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ஒரு அமைச்சர். ராஜா மிகவும் நியாயமானவர், நேர்மையானவர், கண்டிப்பானவர். தப்பு செய்தது யாராக இருந்தாலும் தண்டனை கொடுப்பார். வேண்டியவர்களுக்கு ஒரு நியாயம், வேண்டாதவர்களுக்கு ஒரு நியாயம் என்பதெல்லாம் அவரிடம் கிடையாது.

ஒரு சமயம் அரச சபையிலே அந்த அமைச்சரே விதிமுறைகளுக்கு புறம்பாக நடந்துகொண்டார். மன்னருக்கு கோபம் வந்துவிட்டது. உடனே அந்த அமைச்சரை அருகில் அழைத்து அவர் கன்னத்திலே ஓங்கி அறைந்து விட்டார்.

உடனே அந்த அமைச்சர் என்ன செய்தார் தெரியுமா? அங்கே நின்றுகொண்டிருந்த இன்னொருத்தர் கன்னத்திலே ஓங்கி அறைந்தார். அறை வாங்கியவர் திகைத்துப் போய்விட்டார்.

இவர் ஏன் நமக்கு வந்து அறைந்தார் என யோசித்தார். மன்னரும் திகைத்துப்போனார். நாம் இவரை அறைந்தால் அதற்காக இவர் போய் இன்னொருத்தரை அறைய வேண்டுமா? என்று யோசனை செய்தார். இவருக்கென்ன பைத்தியமா? என்று கூட யோசனை செய்தார்.

அமைச்சரைக் கவனித்தார். அவர் இன்னொருத்தரை அறைந்தாரில்லையா...அந்த ஆளைப் பார்த்து கத்திக்கொண்டு இருந்தார்.

ஏனப்பா என்னிடம் அறையை வாங்கிக்கொண்டு இப்படி விபரமில்லாமல் நின்றுகொண்டு இருக்கிறாய்... நான் உனக்குக் கொடுத்ததை நீ வேறு யாரிடமாவது கொடுத்துவிடு! என்றார்.

உடனே அந்த ஆள் பார்த்தான்... தனக்கு அடுத்தபடியாக நின்றுகொண்டிருந்தவனை ஓங்கி அறைந்தான். அவன் கன்னத்தை தடவிக்கொண்டே யோசித்தான். ஏதோ புரிந்துகொண்ட மாதிரி அடுத்தபடியாக நின்றுகொண்டிருந்தவனை அறைந்தான்.

இப்படி ... அந்த அறை மாறி மாறி போய்க்கொண்டிருந்தது. ஊர் பூராகவும் பிரயாணம் செய்ய ஆரம்பித்துவிட்டது.

அன்றைக்கு இரவு அந்த ராஜா உறங்குவதற்காக போனார். அந்த நேரம் அவரது கன்னத்திலே பளாரென்று ஒரு அறை விழுந்தது! என்னையே அறைவது யார் என்று அதிர்ச்சியோடு மன்னர் திரும்பிப் பார்த்தார். அறைந்தது அவருடைய மனைவி!

"என்ன ஆனது உனக்கு? என்றார். உங்களுக்குத் தெரியாதா? ஊர் பூராகவும் ஒருத்தர் மாற்றி ஒருத்தர் மூலமாக இந்த அறை பிரயாணம் செய்துகொண்டு வருகிறது!'' என்றார் அந்த அம்மா. அப்படியென்றால் ஆரம்பித்த இடத்திற்கே வந்துவிட்டதா? என்றார் மன்னர். என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார். அவர் விபரம் சொன்னார். அப்படியென்றால் நீங்கள் ஆரம்பித்து வைத்த இந்த விளையாட்டை நான் முடித்து வைத்து விட்டேன்! என்றார்.

மறுநாள் காலை மீண்டும் அரச சபை கூடியது. அந்த அமைச்சர் மன்னரைப் பார்த்துக் கேட்டார்... என்ன மகாராஜா என்னிடம் கொடுத்ததை திரும்ப வாங்கி விட்டீர்களா? என்றார். இப்படி நடக்குமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை என்றார் மன்னர்.

ஆனால் நான் எதிர்பார்த்தேன்... அது எங்கே போய்விடப் போகிறது.. ஊர் பூராகவும் சுற்றி கடைசியிலே உங்களிடம் தான் வந்து சேரும் என்று எனக்குத் தெரியும்! என்றார் அமைச்சர்.

இந்தக் கதை வேடிக்கையாக இருந்தாலும் இதிலே உள்ள கருத்து முக்கியமானது. இந்த உலகத்தில் இப்படித்தான் பல கருத்துக்கள் கைமாறி சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

நமது ஆள் ஒருத்தன் தன்னுடைய நண்பன் ஒருவனை கடைத்தெருவிலே பார்த்தான். உடனே ஓடிப்போய் பளார் என்று ஒரு அறை கொடுத்தான். அவன் கன்னத்தை தடவிக்கொண்டே ஏன் என்னை அறைந்தாய்? என்று கேட்டான்.

நீ ஏன் என்னை ஒரு முட்டாள் என்று என் மனைவியிடம் போய்ச் சொன்னாய்? என்றான் அவன். உன்னை ஒரு முட்டாள் என்று சொன்னதற்காகவா நீ என்னை அறைந்தாய்? என்று கேட்டான் இவன். அதற்காக அறையவில்லை... அந்த இரகசியத்தை நீ ஏன் எங்களுடைய வீட்டிலே போய் சொன்னாய்? அதற்காகத்தான் அறைந்தேன்! என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்
## 06 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்
கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அன்று உருவாக்கப்பட்ட நூலகச் சபையின் தலைவராக அன்றைய மாவட்ட நீதவான் சி. குமாரசுவாமி, உப தலைவராக வணக்கத்துக்குரிய கலாநிதி ஐசாக் தம்பையர், இணைச் செயலாளராக அப்புக்காத்தர் சி. பொன்னம்பலமும், சக்கடத்தார் க. மு. செல்லப்பாவும் தெரியப் பெற்றார்கள். தனாதிகாரிகளாக சிறாப்பர் முதலியார் வேலுப்பிள்ளையும் தபாலதிபர் முத்தையாவும் தெரியப் பெற்றார்கள்.

**அன்று உருவாக்கப்பட்ட நூலகச் சபையின் தலைவராக அன்றைய மாவட்ட நீதவான் சி. குமாரசுவாமி, உப தலைவராக கலாநிதி ஐசாக் தம்பையா, இணைச் செயலாளராக அப்புக்காத்தர் சி. பொன்னம்பலம், சக்கடத்தார் க. மு. செல்லப்பா தெரியப் பெற்றார்கள். தனாதிகாரிகளாக சிறாப்பர் முதலியார் வேலுப்பிள்ளையும் தபாலதிபர் முத்தையாவும் தெரியப் பெற்றார்கள். இவ்வாறு மூதறிஞரின் நூலில் கூறப்பட்டுள்ளது. உரையில் க.மு.செல்லப்பா கூறினார்.**

நிர்வாக சபையினராக வட மாநிலக் கல்வியதிகாரி அருணந்தி, வணக்கத்துக்குரிய மிடில்ரன்வீவர், நெவின்ஸ் செல்லத்துரை, முடிக்குரிய புறொக்ரர் கனகசபை, மேலதிக நீதவான் சின்னத்தம்பி, புறொக்ரர் ஆர். ஆர். நல்லையா, இந்து போட் இராசரத்தினம், அப்புக்காத்தர் நைல்ஸ், வணக்கத்துக்குரிய ஞானப் பிரகாசர், பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் நடேசபிள்ளை, தெல்லிப் பளை புறொக்ரர் வி.குமாரசுவாமி, மானிப்பாய் இந்து கல்லூரி அதிபர் ப. வீரசிங்கம், வட்டுக்கோட்டை உப அதிபர் கே.வி.செல்லையா. மத்திய கல்லூரி அருட்பிரகாசம், சென். யோன்ஸ் கல்லூரி ஏ.எம்.கே. குமாரசுவாமி,புலோலி சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், முதலியார் வை. சுப்பிரமணியம், புறொக்ரர் ப.முருகேசபிள்ளை,ஜனாப் அபூபக்கர், புறொக்ரர் ப.இராமலிங்கம், புறொக்ரர் ப.நாகலிங்கம் ஆகியோர் தெரியப் பெற்றனர். கணக்குப் பரிசோதகர்களாகக் கச்சேரி உத்தியோகத்தர் ஏ. முத்துத்தம்பி, எஸ். தம்பி ஆகியோர் தெரியப் பெற்றனர்.

முடிக்குரிய புறொக்ரர் கனகசபை முக்கியமாகப் பலவிடயங்களைக் குறிப்பிட்டு, வாசிகசாலை உருவாவதைப் பிரேரணை ஒன்றின் மூலம் முன்மொழிந்தார்.

**"That a Central free Tamil Library Association be formed with the Original Subscribers and others who are present at this Meeting as Original Members of the Association."** இப்பிரேரணையைக் கல்வியதிகாரி அருணந்தி பின்மொழிய ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பெற்றது.

இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட சகல ஆண், பெண் இருபாலரும் மாதம் இருபத்தைந்து சதம் செலுத்தி அங்கத்தவராயிருந்து பயன் பெற வழிவகை செய்யப்பட்டது. நேர்மையும் நிர்வாகத் திறமையும், கனிவான பேச்சும், நல்ல பண்பாடும் உள்ள செல்லப்பா அவர்களைச் சைவர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் எல்லோரும் வெகுவாக விரும்பினர். அவர் வேண்டுகோள் விடுத்ததும் பலர் தங்கள் வீட்டில் தமக்குப் பயன்படாது கிடந்த பழைய புராண-இதிகாசப் பெருநூல்களை நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்தனர்.

மத்திய இலவச தமிழ் நூல் நிலையச் சங்கத்தின் முதற் கூட்டம் 28-07-1934 இல் நடைபெற்றது. அக் கூட்டத்தில் ஆஸ்பத்திரி வீதியில் மின்சார நிலையத்துக்குத் தென்பகுதியில் ஒரு கடையை வருடாந்தம் முந்நூறு ரூபா வாடகைக்கு எடுத்து 01.08.1934 முதல், நூலகத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப் பெற்றது. அதன்பிரகாரம் தங்கள் நூலகத்தை ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அகன்ற பெரிய கடையொன்றில் 01-08-1934 இல் ஆரம்பித்து வைத்தனர்.

அன்று ஆஸ்பத்திரி வீதியில் அமைந்த நூல் நிலையம் வசதி குறைவான கட்டடமும் சூழ்நிலையுமாயினும் வாசிப்பவர்களுக்குப் போதிய நூல்களையும் சஞ்சிகைகளையும் கொண்டிருந்தது. அக்காலத்தில் வீடுகள் தோறும் திரட்டப்பெற்ற நூல்களுக்குள் சிவதருமோத்தம், நீலகண்ட பாடியம், சித்தாந்த தீபிகை, ஆறுமுகத் தம்பிரானின் பெரியபுராணவுரை, கலியாண சுந்தரனாரின் நவசக்தி பழைய இதழ்கள் முதலிய கிடைத்தற்கரிய நூல்கள் பல அடங்கியிருந்தன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, நவசக்தி முதலிய பழைய சஞ்சிகைகளின் பழைய இதழ்கள், மலர்கள் வந்து குவிந்தன.

நூல் நிலையத்தில் அக்காலத்தில் இரண்டு நீளமான மேசைகளும், ஒரு எழுத்து மேசையும், இரண்டு நீளமான வாங்குகளும், பதினைந்து கைக்கதிரைகளும், இரண்டு கண்ணாடி அலுமாரிகளும், இரண்டு அறிவித்தல் பலகைகளும், ஒரு மணிக்கூடும் இருந்தன. நூலகத்தின் ஆரம்பத்தில் சேர்ந்த ரூபாய் 1002.41 சதத்தை விட, பின்னர் ரூபாய் 541.85 சதம் சேர்க்கப் பெற்றது. இத்தொகையில் நூல் நிலையச் செலவுக்குப் பயன்பட்ட தொகை போக, எஞ்சிய 517.86 தேசிய சேமிப்பு வங்கியில் சேமிக்கப் பெற்றது.

நூலகத்தின் ஆரம்பத்தில், அங்கே இரவல் கொடுக்கும் பகுதியில் 844 நூல்கள் இருந்தன. இவற்றுள் 150 நூல்கள் புதிதாக வாங்கப் பெற்றவை. எஞ்சிய 694 நூல்களும் அன்பர்கள், அங்கத்தவர்கள், அபிமானிகள், அவ்வப் போது அன்பளிப்பு செய்தவையாகும்.வாசிகசாலையில் எல்லோருக்கும் பயன்படும் வகையில் சில சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் அந்த அந்த முகாமையினர் (நிறுவனத்தினர்) இலவசமாக வழங்கினார்கள்.

ஆஸ்பத்திரி வீதியில் நடைபெற்று வந்த நூல் நிலையமும், வாசிகசாலையும் நாள்தோறும் சராசரி ஐம்பது வாசகர்களுக்குப் பயன் கொடுத்து வந்தது. நாள் தோறும் காலை 8 மணி தொடக்கம், மாலை 7.30 மணி வரை பதினொரு மணித்தியால நேரம் பயன் கொடுத்து வந்தமை பாராட்டைப் பெற்றது. முகாமையாளர் ஒருவர், நூலகர் ஒருவர், சம்பளம் பெற்ற உதவி நூலகர் ஒருவர். நிர்வாக் சபையினரின் கட்டுப்பாட்டுக்கு அமைந்து நூலகத்தைத் திறம்பட நடத்தி வந்தார்கள்.

**நூலகத்தின் ஆரம்பத்தில் (1934இல்), அங்கே இரவல் கொடுக்கும் பகுதியில் 844 நூல்கள் இருந்தன. இவற்றுள் 150 நூல்கள் புதிதாக வாங்கப் பெற்றவை. எஞ்சிய 694 நூல்களும் அன்பர்கள், அங்கத்தவர்கள், அபிமானிகள், அவ்வப் போது அன்பளிப்பு செய்தவையாகும்.வாசிகசாலை நாள் தோறும் சராசரி ஐம்பது வாசகர்களுக்குப் பயன் கொடுத்து வந்தது. நாள் தோறும் காலை 8 மணி தொடக்கம், மாலை 7.30 மணி வரை பதினொரு மணித்தியால நேரம் பயன் கொடுத்து வந்தமை பாராட்டைப் பெற்றது என்று அந் நூலில் குறிபிடப்பட்டுள்ளது**

அரியாலை ஊரைச் சேர்ந்த ஆர். சுப்பிரமணியம் அக்காலத்து **U.D.C.** என்னும் நகர சபையின் பிரதிநிதியாயிருந்தவர். அடிக்கடி நகரசபைக் கூட்டத்தில் நூலகத்துக்கு நிதியுதவி கொடுக்கு மாறு பிரேரித்து வந்தவர். விடாக் கண்டரான அவர் விடுத்த வேண்டுகோளுக்கமையவே நகரசபையினர் நூலகத்தைப் பொறுப்பேற்று நடத்தத் தீர்மானித்தனர்.

நல்லவர்கள் நல்ல மனத்தோடு, நல்ல நோக்கத்தோடு தங்களை ஒறுத்துப் பிறர் நன்மைக்காக ஆரம்பித்த நற்பணி, வளர்பிறை போல் நாளும் வளர்ந்து வந்தது. வளர்ந்து வந்த நூலகத்தை யாழ்ப்பாண நகரசபையினரே பொறுப்பேற்று நடத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இரவு பகலாக நடைபெற்று வந்தன. அக்காலத்தில் பொறுப்பு வாய்ந்த சட்டத்தரணிகள் பலர், நகரசபை அங்கத்தவராயிருந்தனர். அவர்கள் சேவை மனப்பான்மை கொண்ட சீரியர். படிப்பார்வம் மிக்க நிறைந்த பண்பாளர். நூலகத்தைப் பொறுப்பேற்பதற்கு நகரசபையார் **(The Urban District Council - U. D. C.)** தீர்மானித்ததும், அந்த நற்செய்தியைத் தலைவர் சபையினருக்கு மகிழ்ச்சி ஆரவாரத்திடையே எடுத்துக் கூறினார்.

**நூலகத்தை நகர சபைபொறுப்பேற்றலும் மத்திய இலவச தமிழ் வாசிகசாலை சங்கத்தை கலைத்தலும்**

நகரசபையினர் தாமே ஒரு வாசிகசாலையை ஆரம்பித்து நடத்தலாம் என்று கருதிய வேளையில் ஆர்.சுப்பிரமணியம் இந் நூலகத்தைப் பொறுப்பேற்று நடத்துமாறு பிரேரணை கொண்டு வந்தார். இவ்வாறாக நூல் நிலைய பரிபாலன சங்கத்தின் காரியதரி சியாய் திரு. க.மு.செல்லப்பா நகரசபைத் தலைவருக்கு 21-12-34 இல் எழுதிய கடிதம் இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

தலைவர்,
நகரசபை, யாழ்ப்பாணம்,

ஐயா, தங்கள் சபையினர் எங்கள் நூல் நிலையத்தை பொறுப்பேற்று நடத்துதல் சம்பந்தமாக நிறைவேற்றிய பிரேரணையை எங்கள் காரிய நிர்வாக சபையினர் கருத்துடன் பரிசீலனை செய்து 1.1.1935 தொடக்கம், நூல்நிலையத்தை நகரசபையின் பொறுப்பில் ஒப்படைப்பதற்குத் தீர்மானித்து விசேட பொதுக்கூட்டத்தில் அனுமதி பெறுவதற்கு 20.12.1934இல் கூடினர். அக்கூட்டத்தில் நூல் நிலையத்தை குறித்த நாளில் ஒப்படைப்பதற்குத் தீர்மானித்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; மன்னிப்புக் கோரினார் சஜித்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பொதுமக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.



அவர் அமைச்சரவை உறுப்பினராக இருந்தபோது தாக்குதல்கள் நடந்தமைக்கு வருந்துவதாக அவர் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாஸ அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நல்லாட்சி அரசாங்கத்தில் வீடமைப்பு சமுர்த்தி அமைச்சராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4)

# ஆலய வழிபாடு ஏன் – எதற்கு – எப்படி

## ஆலயங்களின் வகையும் – அற்புதங்களும்

ஆலயங்களை மிகவும் நுட்பத்துடன் கட்டிய நம்முன்னோர்கள் ஒவ்வொரு ஆலயத்தையும் ஒவ்வொரு விதமான பலன் தரும் ஆலயமாக அமைத்தனர். சில ஆலயங்களை மக்களின் துயர் துடைக்கச் செய்யும் பரிகாரத் தலமாக மாற்றினார்கள்.

அதுமட்டுமல்ல ஒவ்வொரு ஆலயத்தின் பின்னணியிலும் புராண நிகழ்வு சம்பவத்தை அடிப்படையாக வைத்தனர். இதன் காரணமாக பழமை சிறப்பு வாய்ந்த ஆலயங்கள் இன்றும் புராணங்கள் அடிப்படையில் பலன் தரும் அமுத சுரபிகளாக உள்ளன.

ஆலயங்களைக் கட்டிய நம் முன்னோர்கள் வெறுமனே "ஆலயத்துக்கு வாருங்கள்" என்றால் யாரும் வர மாட்டார்கள் என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். எனவே மக்கள் அடிக்கடி ஆலயத்துக்கு வர வேண்டும் என்பதற்காக வகைப்படுத்தியுள்ளனர்.

இந்த ஆலயத்துக்குச் சென்றால் இந்தக் குறை தீரும் என்ற மரபை ஏற்படுத்தினார்கள். அதற்காகவே ஆலயங்களை வகைப்படுத்தினார்கள். அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் தேடுவதற்கு ஏற்ப ஆலயங்கள் அமைக்கப்பட்டன.

சிவனை வழிபடும் சைவம், விஷ்ணுவை வழிபடும் வைணவம், அம்பாளை வழிபடும் சாக்தம், விநாயகரை வழிபடும் காணாபத்தியம், முருகனை வழிபடும் கௌமாரம், சூரியனை வழிபடும் சௌரம் ஆகிய 6 பிரிவுகளில் தலம், தீர்த்தம், மூர்த்தம் ஆகியவற்றின் அடிப்படையில் ஆலயங்களை நம் முன்னோர்கள் வகைப்படுத்தினார்கள்.

இந்த 6 பிரிவுகளும் ஒன்றிணைந்து இந்து சமயமாக வலுப்பெற்ற போதிலும் நம் முன்னோர் வகுத்துக் கொடுத்த ஆலயங்களின் பிரத்யேக சிறப்புகளில் மட்டும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

இந்தியா முழுவதும் இத்தகைய சிறப்புடைய சிவாலயங்கள் நிரம்ப உள்ளன. இமயமலைச் சாரலில் அமைந்துள்ள கேதார்நாத், துங்கநாத், ருத்ரநாத், மத்மஹேஷ்வர், கபிலேஷ்வர் ஆகியவை பஞ்ச கேதார தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்தத் தலங்களில் சிவபெருமானின் உடல் பாகங்கள் தோன்றியதாக சைவர்கள் நம்புகிறார்கள்.

கைலாய மலையில் சிவபெருமானின் அருளாட்சி நடப்பதாக ஆண்டுதோறும் அங்கு பக்தர்கள் சென்று வந்த வண்ணம் உள்ளனர்.

அந்தக் கைலாய மலைக்கு இணையாக தமிழ் நாட்டில் வெள்ளியங்கிரி மலை உட்படப் பல தலங்களை நம் முன்னோர்கள் தென் கைலாயமாக வகைப்படுத்தியுள்ளனர்.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் தாமிரபரணி நதிக்கரையில் பாபநாசம், சேரன்மகாதேவி, கோடக நல்லூர், குன்னத்தூர், முறப்பநாடு, ஸ்ரீவைகுண்டம், தென் திருப்பேரை, ராஜபதி, சேந்தபூமங்கலம் ஆகிய 9 இடங்களில் தமிழகத்தின் நவ கைலாயங்கள் உள்ளன.

அதுபோல காஞ்சிபுரம், திருவாணைக்காவல், திருவண்ணாமலை, திருக்காளத்தி, சிதம்பரம் ஆகிய 5 தலங்களையும் பஞ்சபூத தலங்களாக வரையறுத்துள்ளனர். தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதுபோன்று பஞ்சபூத தலங்கள் உள்ளன.

சிவபெருமான் நடராஜராக அருள் கூத்து நடத்தும் தலங்கள் தமிழ் நாட்டில் எத்தனையோ இருந்தாலும் சிதம்பரம் (கனகசபை), திருவாலங்காடு (ரத்தின சபை), மதுரை (வெள்ளி சபை), நெல்லை (தாமிர சபை), குற்றாலம் (சித்திர சபை) ஆகியவற்றைப் பஞ்ச சபைகளாக வகை[illegible]க்கப்[illegible] (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## மண்மேடு சரிந்ததில் ஒருவர் பலி, இருவர் மீட்பு

(கொழும்பு)

தலவாக்கலை, அக்கரப்பத்தனை பிரதேசத்தின் வோல்புறுக் பகுதியில் மண்மேடு சரிந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்தனர்.

கட்டட நிர்மாண வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் மீதே நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் அக்கரப்பத்தனை பிரதேசத்தின் பெல்மோரல் தோட்டத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார்.

மேலும் அனர்த்தத்தின் பின்னரான மீட்புப் பணியில் பொலிஸார் மற்றும் மக்கள் ஈடுபட்டதுடன் காயமடைந்த இருவரும் மீட்கப்பட்டு அக்கரப்பத்தனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-4)

## 13 மில்லியன் பெறுமதியான தங்கம் மீட்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தில் மறைத்து வைத்திருந்த நிலையில் 13 மில்லியன் ரூபாய் பெறுமதியான தங்கம் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மூன்று பொதிகளாக இருந்த ஒரு கிலோ 500 கிராம் நிறையுடைய தங்கம் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பொதிகள் விமான நிலைய கழிவறைக்கு அருகில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. (ந-4)

## புத்தாண்டை முன்னிட்டு விசேட புகையிரத சேவைகள்

(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட புகையிரத சேவைகள் சில முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதனடிப்படையில் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரையில் இவ்வாறு விசேட புகையிரத சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 150 | 160 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 120 |
| பச்சைமிளகாய் | 140 | 140 | 160 |
| தக்காளி | 100 | 90 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 70 | 50 |
| கோவா | 120 | 100 | 140 |
| கரட் | 180 | 180 | 200 |
| பூசணி | 70 | 50 | 60 |
| புடோல் | 120 | 90 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 100-250 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 250 | 260 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 90 | 160 |
| கருணைக் கிழங்கு | 150 | 150 | 160 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 90 | 120 |
| கறிமிளகாய் | 150 | 180 | 140 |
| முருங்கைக்காய் | 900 | 600 | 600 |
| போஞ்சி | 180 | 220 | 200 |
| கத்தரிதம்புள்ள | 130 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 30 |
| தேசிக்காய் | 140 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-70 | 50-80 |
| இராசவள்ளி | 260 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 180 | -- | 200 |
| முள்ளங்கி | 50 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 80 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | -- | 120 |

# 50 இலட்சம் பெறுமதியான பொருட்கள் பொலிஸாரால் மீட்பு



(நல்லூர்)

கடந்த சில மாதமாக யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் களவாடப்பட்ட சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான பல உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களவு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு நபர்கள் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

நிறுவனம், கடை, தேவாலயம் மற்றும் வீடு உள்ளடங்கலாக 7 இடங்களில் களவாடப்பட்ட உபகரணங்களே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்த னர்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவின் வழிகாட்டலில், யாழ்.பொலிஸ் நிலைய குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி சி.ஐ. நெவில் பியந்த தலைமையிலான குழுவினரே களவாடப்பட்ட உபகரணங்களை மீட்டு சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

# களைகட்டும் தர்ப்பூசணி வியாபாரம்



(குப்பிழான்)

தற்போது நிலவும் வெப்பமான காலநிலையின் விளைவாக பொதுமக்கள் மத்தியில் தர்ப்பூசணி வியாபாரம் அமோகமடைந்துள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் இவ் தர்ப்பூசணி வியாபாரம் களைகட்டியுள்ளது.

இவ் வியாபாரம் மூலம் வியாபாரிகள் அதிக இலாபம் அடைந்துள்ளதோடு பொதுமக்கள் மத்தியிலும் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. சிறியோர் முதல் பெரியவர்கள் வரை இப்பழத்தில் ஆர்வம் காட்டி அதிகம் வாங்கி உண்கின்றனர். (5-4-18)

# சிவபூமி ஆண்டு விழா

(குப்பிழான்)

தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தின் 14 ஆவது ஆண்டுவிழா நாளை 7 ஆம் திகதி புதன்கிழமை எளிமையாக இடம்பெறும்.

குறித்த நிகழ்வில் வழிபாடுகள் மட்டும் இடம்பெறும் என சிவபூமி நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (5-4-18)

# யானை வேலிகளை அமைப்பதற்கு வனவளத் திணைக்களம் தடை

## பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் யானை வேலிகளை அமைப்பதற்கு வனவளத் திணைக்களமே தடையாக உள்ளதாக பொது அமைப்புகளினால் தெரிவிக்கப்படுகின்றது. மாவட்ட, பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் தீர்க்கப்படாத பிரச்சினையாக யானை வேலிகளை அமைக்கும் பணிகள் காணப்படுகின்றன.

இதற்கு பிரதான காரணம் வனவளத் திணைக்களம் மக்கள் வாழ்கின்ற சூழலில் தமது எல்லைகளை நிர்ணயித்திருப்பது.

இதன் காரணமாக யானை வேலிகளை அமைப்பதற்கு காணிகளை வனவளத் திணைக்களம் விடுவிக்க வேண்டும்.

யானை வேலிகளை கிராமங்களுக்கு அருகில் அமைத்தாலும் வன வளத் திணைக்களம் தமது எல்லைகளை கிராமங்களுக்கு அருகில் கொண்டு வருவதாகவும் பொது மக்களினால் தெரிவிக்கப்படும் நிலையில் யானைகளின் தொல்லைகளை எதிர்கொள்கின்ற மாவட்டத்தின் பல கிராமங்கள் யானை வேலிகளை அமைத்துக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது.

யானை வேலிகளை அமைப்பதற்கு வனஜீவராசிகள் திணைக்களமும் வனவளத் திணைக்களமும் இணைந்து செயற்பட வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பயிர்ச் செய்கைகளை யானைகளே கூடுதலாக அழித்து வருகின்றன.

யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதில்லை எனவும் விவசாயிகள் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருகின்றனர். (5-4-350)

# கடும் காற்றினால் வீடு சேதம்



(கண்டாவளை)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட கிழவன் குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் காற்றுடன் கூடிய மழையினால் வீட்டின் கூரைகள் தூக்கி வீசப்பட்டது. முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிழவன் குளம் பிரதேசத்தில் ஒருவரது வீட்டுக் கூரை இவ்வாறு காற்றினால் தூக்கி வீசப்பட்டது.

வீட்டில் இருந்த ஐந்து வயது குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பியதுடன் வீட்டின் அனைத்துப் பொருட்களும் மழை வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளன. (5-281-315)

# சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னிட்டு சுவரொட்டிகள்




(நெளுக்குளம்)

வவுனியா சிறிநகரில் வசிக்கும் மக்களுக்கு காணி ஆவணங்களை வழங்குமாறு கோரி சத்தியாக்கிரக போராட்டம் இடம்பெற்று வருகின்றது . இதற்கு ஆதரவாக நேற்று வவுனியா நகர் முழுவதும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

குறித்த சுவரொட்டிகளில் "அரச நிர்வாகமே 55 நாட்களைக் கடக்கும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு பதில் என்ன?" என்று பிரசுரிக்கப்பட்ட சுவ ரொட்டிகள் நகர் முழுவதும் ஒட்டப்பட்டன. (5-4-299)

# அரச ஊழியர்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரி போராட்டம்



(நெளுக்குளம்)

வவுனியா செட்டிகுளத்தில் சமுர்த்தி உத்தியோகத்தரொருவரை ஒருவர் தாக்கியதால் அரச உத்தியோகத்தர்களாகிய தாம் கடமைக்குச் செல்வதற்கு பாதுகாப்பு தேவை எனவும் தாக்கிய நபருக்கு தகுந்த நடவடிக்கை எடுக்க கோரியும் செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் அரச உத்தியோகத்தர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது வன்முறையாளர்களால் அரச ஊழிர்கள் தாக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும், அரச உத்தியோகத்தரின் பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்த வேண்டும், அரச உத்தியோகத்தர்கள் மீதான தொடர் தாக்குதலுக்கு கடும் சட்டத்தினை அமுல்படுத்து போன்ற கோசங்களை எழுப்பியதுடன் பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதேச செயலாளர் திருமதி. கு.சுலோஜனாவிடம் மகஜரொன்றினையும் கையளித்தனர்.

இந்நிலையில் கடந்த 30 ஆம் திகதி சமுர்த்தி உத்தியோகத்தரை தாக்கிய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தியதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தககது. (5-4-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் பேசினாலும் வாய் பொய்தான். உண்மையின் மீது அன்பு கொள்ளுதல் தெய்வீகமானது.
- ஸ்ரீ அரவிந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கர்தினாலின் கால நிர்ணயம் யாருக்குச் சார்பானது

கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கருத்துக்கள் இந்த நாட்டின் அரசியலில் அதிகமாகப் பேசப்படுகிறது.

அதற்குக் காரணம் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் தேவாலயங்களில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் என்று கூறிக் கொள்ளலாம்.

எனினும் அந்தக் காரணம் முழுமையானதன்று.

மாறாக ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் பேசுபடுபொருளாக இருந்த அரசியலமைப்புச் சீர்திருத்தத்தில் பௌத்த மதத்துக்கான அதிகாரங்கள் எந்தவகையிலும் குறைவடையக்கூடாது எனக் கருத்துரைத்தவர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

ஒரு கத்தோலிக்க மதத் தலைவராக இருந்து கொண்டு பௌத்த மதத்துக்கு அதிகூடிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும் எனக் கருத்துரைத்த மாத்திரத்தில், கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் கருத்துக்கள் அரசியல் புலத்தில் அவதானத்துக்குரியதாயிற்று.

இதனைத் தொடர்ந்து ஈஸ்ரர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் குறித்து கர்தினால் முன்வைத்த கருத்துக்கள் அரசாங்கத்துக்கும் பாதுகாப்புத் தரப்புக்கும் தலையிடியைக் கொடுத்திருந்தது.

இதன்காரணமாக இலங்கையில் கர்தினால் என்ற கத்தோலிக்க மதத் தலைவர்களாக இருந்தவர்களில், மல்கம் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் அதிகளவில் மக்களால் பேசப்படுபவராக இருக்கின்றார்.

இதை நாம் கூறும்போது, கர்தினால் அவர்கள் முன்வைக்கின்ற கருத்துக்களில் சர்ச்சைகளும் சங்கடங்களும் இருப்பதால்தான் அவர் பற்றி அதிகமாகப் பேசப்படுகிறது என்று விமர்சிப்பவர்களும் இருக்கவே செய்வர்.

ஆனால் அதுபற்றிய ஆய்வுகள் இங்கு முக்கியத்துவமுடையவையல்ல.

மாறாக ஈஸ்ரர் தாக்குதல் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால், எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் தனது நிலைப்பாடு வேறுவிதமாக இருக்கும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரித்துள்ளார்.

இங்குதான் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை இந்நாள் ஆட்சித் தரப்பினர் வஞ்சம் தீர்க்க கர்தினால் மல்கம் ரஞ்சித் அவர்கள் அடித்தளமிடுகிறாரா? என்ற கேள்வி எழுகிறது.

எதுஎவ்வாறாயினும் ஆண்டகையின் எச்சரிக்கைகள் பௌத்த சிங்கள மக்களால் எவ்வாறு பார்க்கப்படும் என்பதைப் பொறுத்துத் தான் கர்தினாலின் எதிர்காலமும் தங்கியுள்ள தென்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

# மக்கள் அதிகாரம் வழங்கிய போதும் அரசு எந்த வேலைகளையும் செய்யவில்லை

### கெட்டம்பே விகாராதிபதி சிறி விமல தேரர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மக்களிடம் கோரிய அனைத்து அதிகாரங்களையும் மக்கள் வழங்கிய போதிலும் வழங்கிய வாக்குறுதிகளின் படி எந்த வேலைகளையும் அரசாங்கம் செய்யவில்லை என கண்டி கெட்டம்பே விகாராதிபதி கெப்பிட்டியாகொட சிறி விமல தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கல்வியமைச்சர் ஜீ.எல். பீரிஸ் நேற்று முன்தினம் தேரரை சந்தி த்தபோதே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அவர்மேலும் கூறுகையில்,

அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள முடியாது இழுபறிபடுகின்றனர். போதுமான அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

19ஆவது திருத்தச் சட்டத்தால் முடியாது. 20 ஆவது திருத்தச் சட்டம் வேண்டும் என்றனர். அதனையும் கொடுத்தனர்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை வேண்டும் என்றனர். அதனையும் கொடுத்தனர். மேலும் எதனை வழங்க வேண்டும்.

மீண்டும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெறுவதை எண்ணிக் கூட பார்க்க முடியாது. அதிகாரத்தை பெற்றுக் கொடுத்தால், அதனைவைத்து வேலை செய்ய வேண்டும்.

தமது பைகளை நிரப்பிக் கொள்ளும் தேவை இவர்களுக்கு இருக்கின்றது எனவும் சிறி விமல தேரர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

# மாகாண வைத்தியசாலை அபிவிருத்திக்கு ரூபாய் 5 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு

### சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி

(கொழும்பு)

நாட்டின் மாகாணவைத்தியசாலைகளை அபிவிருத்திசெய்யும்நோக்கில்5000 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றைய தினம் உரையாற்றிய போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபக்ச வினால் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என பவித்ரா குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார். (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்தமற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 7ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத் தில்** 4 ஆவது மைல்கல் பூநகரி, அரசபுரம், ஞானிமடம், கௌதாரிமுனை, காஞ்சிபுரம், கறுக்காய்தீவு, கொல்லக்குறிச்சி, தம்பிராய், குஞ்சுப்பரந்தன், முட்கொம்பன் சந்தி, முட்கொம்பன், நல்லூர் பூநகரி, நேரடம்பன், நெற்பிலவு, ஓவசியர் கடைச் சந்தி, பள்ளிக்குடா, பள்ளிக்குடா சுனாமித் திட்டம், பரமங்கிராய், பரமன்கிராய், செம்மண் குன்று, சின்னபல்லவராயன்கட்டு, தம்பிராய், தரணிக் குடியிருப்பு, வாடியடி, பூநகரி, வெட்டுக்காடு (கௌதாரி முனை), வீரையடி விநாசியோடை (கௌதாரிமுனை), 66 ஆம் பிரிவு இராணுவமுகாம் பூநகரி, அரசபுரம் இராணுவமுகாம், செல்லையாதீவு, பிரதேச செயலகம், பூநகரி, 66 ஆம் பிரிவு இராணுவ பயிற்சிப் பள்ளி அரசபுரம் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** அறவந்துலாவ, சமயபுரம், தவசிக்கு ளம், ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** உயிலங்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

### திருமலை மாவிலாற்றில்

# குளிக்க சென்றவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை-மாவிலாறு வாய்க்காலில் குளிப்பதற்காக சென்ற இளைஞரொருவர் நீரில் மூழ்கி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதி அபிவிருத்தி நிர்மாணப்பணியில் ஈடுபட்டு வரும் ஐந்து பேர் வேலையை முடித்து விட்டு மாவிலாறு வாய்க்காலில் குளிப்பதற்காக சென்றபோது நீரில் ஒருவர் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் பேராதனை - முர்தலாவ.பேரகொல்ல பகுதியைச் சேர்ந்த சமரக்கோன் முதியன்சலாகே சமிந்த பண்டார சமரக்கோன் (28வயது) எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்போது உயிரிழந்தவரின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், சட்ட வைத் தியரின் பிரேத பரிசோதனை முடிவடைந்த உடன் உறவினர்களிடம் ஒப் படைக்கப்பட உள்ளதாக வும் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர். (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



### உறுதியுடன் செயற்படுங்கள்

❖ தெய்வத்தைப்பற்றி பேசும்போது பசியால் நலிந்து வாழும் மக்களிடையே பேசுவதால் எந்த பயனும் இல்லை. அது அவர்களை அவமதிப்பது போல் ஆகும். பசித்தவனிடம் ஆன்மிகம் பேசி பயனில்லை.

❖ மனிதனிடம் தெய்வீக சக்தி ஒளிந்து கிடக்கிறது. அதைவெளிக்கொண்டு வருவது தான் லட்சியமாக இருக்க வேண்டும்.

❖ முதலில் நாம் தெய்வங்களாவோம். பின்னர் பிறரை தெய்வங்களாக்கும் முயற்சியில் ஈடுபடுவோம். "ஆகுக", "ஆக்குக" என்பதே நமது குறிக்கோள்.

❖ நீதி நூல்களின் லட்சியம் சுயநலமின்மையே. பிறருடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு சிந்திப்பது சிங்கத்திற்கு சமமான ஆற்றலை இதயத்திற்கு தருகிறது.

❖ நல்ல லட்சியத்தைத் தேர்வு செய்து மனவுறுதிடன் வீரனாக இருங்கள். மனிதனாகப் பிறந்திருக்கிறீர்கள். வாழ்ந்து மறைந்த பிறகு ஒரு அழியாத அறிகுறியை விட்டு செல்லுங்கள். உறுதியுடன் செயற்படுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் ரூபாய் சம்பள விவகாரம்

## பெருந்தோட்ட நிறுவனங்களின் கோரிக்கை நிராகரிப்பு



(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக ஆயிரம் ரூபாவை வழங்குவது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு இடைக்கால தடை விதிக்குமாறு பெருந்தோட்ட நிறுவனங்கள் முன்வைத்த கோரிக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானியை வலுவற்றதாக்க கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது வர்த்தமானிக்கு எதிராக இடைக்கால தடை விதிக்குமாறு கோரப்பட்ட போதும் நீதிமன்றம் அதனை நிராகரித்தது.

இந்த மனுமீதான மேலதிக விசாரணைகளுக்கு எதிர்வரும் மே மாதம் 5 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளை குறித்தொதுக்கி வழக்கினை நீதிமன்றம் பிற்போட்டது. (நி-4)

# கொவிட் தடுப்பூசி ஏற்றுமதிகளுக்கு எந்தத் தடையுமில்லை

## இந்திய உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)

கொவிட் -19 தடுப்பூசிகளின் ஏற்றுமதிக்கு இந்தியா எந்தத் தடையும் விதிக்கவில்லை என்று இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், புதுடில்லியில் உள்ள இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் 2021 ஏப்ரல் 2 அன்று கொவிட்-19 தடுப்பூசிகளின் ஏற்றுமதிக்கு தடை விதிக்கவில்லை என்று தெளிவாகக் கூறியதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கொவிட் தடுப்பூசி விநியோகம் செய்யப்படும் 80 நாடுகளில் இலங்கையும் ஒன்று.

இந்த ஆண்டு ஜனவரியில் இந்தியாவில் இருந்து பரிசாக வழங்கப்பட்ட முறையாக அங்கீகரிக்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா கொவிட்-19 தடுப்பூசிகள் இலங்கையில் உள்ள பயங்கரமான தொற்றுநோய்க்கு எதிரான தடுப்பூசி திட்டங்களுக்கு முதன்மையாக தொடங்கப்பட்டது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கோவிஷீல்ட் தடுப்பூசியின் 1.25 மில்லியனுக்கும் அதிகமான டோஸ்கள் இதுவரை இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எந்தவொரு நாடும் தனது சொந்த மக்களுக்கு தடுப்பூசி போடும்போது வேறு நாடுகளுக்கு இந்த அளவு தடுப்பூசிகளைப் பகிர்ந்து கொள்ளவில்லை.

இந்தியாவில் கொவிட்-19 தடுப்பூசிகளின் உற்பத்தி உள்நாட்டு தேவை மற்றும் உலகளாவிய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக மேலும் அதிகரித்து வருகிறது என்றும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

## முழுமையாக ஆராயாது வழக்குத் தாக்கல் செய்யப்படமாட்டாது- சட்டமா அதிபர்

(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான குற்றப் பத்திரம் உடனடியாக தாக்கல் செய்யப்படும் என வெளியான தகவலை சட்டமா அதிபர் திணைக்களம் மறுத்துள்ளது.

சட்டமா அதிபரின் இணைப்பு அதிகாரி அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்ன இதனை தெரிவித்தார். இது தொடர்பான சகல தகவல்களும் 12 பேர்



அடங்கிய குழுவினால் தொடர்ந்தும் ஆராயப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கை ஆராயப்படுவதாகவும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரைகள் முழுமையாக ஆராயப்படாமல் வழக்குத் தாக்கல் செய்யப்படமாட்டதெனவும் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. (நி-4)

# சட்ட வல்லுநர்களுக்கான கையடக்கத் தொலைபேசிக்கு அமெரிக்கா நிதியுதவி

(கொழும்பு)

ஐக்கிய அமெரிக்காவின் அனுசரணையுடன் கொழும்பு சட்ட சங்கம் தனது உறுப்பினர்கள் இணையத்தினூடாக நிகழ்நிலை சட்டவள ஆதாரங்கள் மற்றும் நீதிமன்ற நாட்காட்டிகளை அணுகுவதற்கு ஏதுவாக அண்மையில் கையடக்கத் தொலைபேசி செயலியொன்றை அங்குரார்ப்பணம் செய்தது.

நீதிமன்ற நாட்காட்டிகள் மற்றும் சட்ட அறிக்கைகள் தற்பொழுது விரல் நுனிகளிலேயே கிடைப்பதால் சட்டத்தரணிகள் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியும்.

இந்த கையடக்கத் தொலைபேசி செயலிக்கு ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் சர்வதேச அபிவிருத்தி முகவரமைப்பு நிதியுதவி வழங்கியதுடன், இலங்கையில் துறைசார் சட்ட சங்கமொன்றுக்கு இவ்வாறானதொரு செயலி நிறுவப்பட்டிருப்பது இதுவே முதல் சந்தர்ப்பமாகும். (நி-4)

# சிவில் உடையில் பேருந்துகளில் பொலிஸார்

## சாரதிகளை கண்காணிக்கும் பணி ஆரம்பம்



(கொழும்பு)

மாறு வேடம் தரித்த பொலிஸ் அதிகாரிகள் பயணிகள் பேருந்துகளில் கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சாரதிகள் விடும் தவறுகளை குறித்த அதிகாரிகள் விழிப்புடன் கண்காணிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விசேடமாக அதிக வேகம், போக்குவரத்தின் போது கையடக்க தொலைபேசிகளை பயன் படுத்தல் மற்றும் ஏனைய வீதி போக்குவரத்து விதிகளை மீறுகின்றமை உள்ளிட்ட விடயங்களை அந்த அதிகாரி கண்காணிக்கவுள்ளதாக ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அவ்வாறு சாரதி ஒருவர் தவறு இழைப்பாரானால் அவர் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# சம்பா அரிசியை 89 ரூபாவுக்கு வழங்க தனியார் வர்த்தகர்கள் உடன்பாடு

(கொழும்பு)

சம்பா அரிசியை 89 ரூபாவுக்கும் நாட்டரிசியை 90 ரூபாவுக்கும் சதொச நிறுவனத்திற்கு வழங்குவதற்கு தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் விருப்பம் தெரிவித்திருப்பதாக விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

தனியார் துறையினருடன் விவசாய அமைச்சு போட்டித் தன்மை நிலையை ஏற்படுத்திய தன் ஊடாக தற்பொழுது அரிசி விலை வீழ்ச்சியடைந்திருப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அநுராதபுரம் ஜெயஸ்ரீ மாபோதியில் நேற்று முன் தினம் நடைபெற்ற தேசிய புத்தரிசி நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

விவசாயிகளின் உற்பத்திக்கு கூடுதலான விலையை வழங்குவது போன்று, குறைந்த விலையில் அரிசியை நுகர்வோருக்கு வழங்குவதற்கான வேலைத் திட்டத்தை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி எம்மிடம் வலியுறுத்தினார்.

சவால் மிக்க இந்தத் திட்டத்தின் கீழ் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி முதல் நாட்டில் உள்ள 500 சதொச கிளை வலைப்பின்னல் ஊடாகவும் 2,500 கூட்டுறவு விற்பனை நிலையங்களூடாகவும் 93 ரூபாவுக்கு அரிசியை வழங்குவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டோம். தற்பொழுது சந்தையில் அரிசியை 93 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை உண்டு.

வரலாற்றில் முதல் முறையாக 23 ஆயிரம் மில்லியன் தொன் நெல்லை கொள்வனவு செய்ய எம்மால் முடிந்துள்ளது.

அன்று 101 ரூபாவுக்கு விற்பனை செய்த நாட்டரிசியை 89 ரூபாவுக்கு விற்பனை செய்ய தனியார் துறையினர் முன்வந்துள்ளனர். வரலாற்றில் முதல் முறையாக தனியார் துறையினருடன் போட்டியிடுவதற்கு பெரும் தொகையான பணத்தை நெல் கொள்வனவுக்காக ஜனாதிபதி வழங்கியமையே இதற்கு காரணமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் நாட்டின் தேவைக்கு மேலதிகமாக 6 மில்லியன் கிலோ அரிசி இருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தில்...

நேற்று முன்தினம் உயிரிழந்தார்

அவருக்கு கோவிட் - 19 நோய்த் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் வசிப்பவர் என அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## வெப்பமான கால...

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறித்த திணைக்களம் வெளியிட்ட வெப்பக் குறியீட்டின்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, மாத்தளை, அம்பாறை, பதுளை, கம்பஹா, கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்கள் கடுமையான வெப்பத்தால் பாதிக்கப்படும்.

இதற்கிடையில் மன்னார், வவுனியா, அனுராதபுரம், பொலநறுவை, புத்தளம், குருநாகல் மற்றும் மொனராகலை மாவட்டங்களும் வெப்பமான வானிலை காரணமாக பாதிக்கப்படுவதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற பகுதிகளில் வெயிலில் தொடர்ந்து செயற்படுவதால் மக்கள் பாதிக்கப்படலாம்.

வெளியிடத்தில் வேலை செய்வோர் முடிந்தவரை அடிக்கடி நீர் அருந்தவும், நிழலில் ஓய்வெடுக்கவும் என திணைக்களம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

வீட்டில் இருக்கும் முதியவர்கள் மற்றும் நோயுற்றவர்களின் நிலைமைகளை சரி பார்க்கவும், குழந்தைகளை கவனிக்குமாறும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ம-3)

## மோட்டார் சைக்...

விபத்தின்போது குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவரது மகன் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தையும் மகனும் எதிரே வந்த டிப்பர் மோதி விபத்துக்குள்ளாகினர். இந்த விபத்தின்போது சுதந்திரபுரம் கொலனி பகுதியினை சேர்ந்த 53 வயதுடைய வள்ளிபுனம் ஜெயராசா என்பவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தினை ஏற்படுத்திய டிப்பர் வாகனத்துடன் சாரதி கைது செய்யப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரால் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப் பட்டுள்ளதுடன் விபத்து குறித்தான விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள். (ம-3,281)

## யாழில் மேலும்...

கிழமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர்களில் 8 பேர் நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கு உட்பட்டவர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட ஆய்வுகூடம் என இரண்டிலும் 761 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் 16 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அந்தவகையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவரும் பருத்தித்துறை வைத்தியசாலை நோயாளர் விடுதியில் ஒருவரும் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் ஒருவருக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் நாவாந்துறையைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணம் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்கும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நோயாளிகள் இருவருக்கும் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் நால்வர் பாற்பண்ணை கிராமத்தைச் சேர்ந்தவர்கள். மூவர் ஏற்கெனவே தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள் என சுய தனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

மற்றொருவர் யாழ்ப்பாணம் மாநகரில் வங்கி ஒன்றில் பணியாற்றும் கொக்குவிலில் வசிப்பவர்.

வவுனியா பொது வைத்தியசாலை விடுதி ஒன்றில் சிகிச்சை பெற்ற நோயாளி ஒருவருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ம-3,18,33)

## தமிழர்களே...

இலங்கை சிங்கள பௌத்த நாடல்ல எனவும் ஆதிக் குடிகளாக தமிழர்களே இருந்தனர் என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளதாகவும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர், நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திர [illegible] யில், சம்பந்த [illegible] பகிர்வு என்ற பேரில் பிரிவினையைத் தூண்டப் பார்க்கின்றன என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ளமை தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்துள்ள நீதியரசர்,

"ஜனாதிபதியின் தப்பான சிந்தனையின் வெளிப்பாடே இதுவாகும். ஏதோ, இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு, தமிழர்கள் வந்தேறு குடிகள், எங்கிருந்தோ வந்த அவர்கள் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையாக வசிப்பதால் தமக்கென நாட்டின் ஒரு பகுதியைத் துண்டாடப் பார்க்கின்றார்கள் என்பதே அவரின் கருத்து.

ஆனால், உண்மை அதுவல்ல. இலங்கை நாடானது என்றுமே தமிழ்ப் பேசும் இடங்கள், சிங்களம் பேசும் இடங்கள் என்று பிரிந்துதான் இருந்து வருகின்றது.

இப்பொழுதும் புகையிரத வண்டி மதவாச்சியைத் தாண்டியதும் தமிழர்கள் சற்று மிடுக்குடன் தமிழில் குரல் எழுப்பிப் பேசுவார்கள். அதுவரையில் பெட்டிப் பாம்பு போல் அடங்கி இருந்தவர்கள் இராணுவத்தினர் வண்டிக்குள் இருந்தால்கூட சற்றுக் குரலெழுப்பி தமிழில் பேசுவதைக் காணலாம். அதன்பொருள், தமிழ்பேசும் இடங்களை நோக்கி புகையிரதம் புறப்பட்டு விட்டது என்பதேயாகும்.

இந்த நாடு சிங்கள பௌத்த நாடல்ல. தமிழர்கள் வந்தேறு குடிகள் அல்லர். அவர்கள் இன்று நாட்டைத் துண்டாடக் கேட்கவில்லை. இலங்கையைத் துண்டாட வேண்டும் என்ற எண்ணமும் வல்லரசுகளுக்கு இல்லை.

இதை கோட்டாபய ராஜபக்ஷ என்ற இளைப்பாறிய முன்னைய இராணுவ அதிகாரி புரிந்துகொள்ள வேண்டும்.

வெறுமனே, பௌத்த பிக்குகள் சிலர் கூறும் தப்பான சரித்திரத்தை முன்வைத்து தப்பான முடிவுகளுக்கு அவர் வரக்கூடாது. முழு நாட்டுக்கும், சகல மக்களுக்கும் தான் ஜனாதிபதி என்று கூறியவர் எவ்வாறு சிங்கள பௌத்த சிந்தனையில் இருந்து கொண்டு நாட்டைப் பாரபட்சமின்றி நிர்வகிக்கப் போகின்றார் என்பது முக்கியமான ஒரு கேள்வியாகும். அவரின் கூற்று தவறானது" என்று குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## இரா...

டல் நேற்று மாலை ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீருக்கு மத்தியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த ஆயருக்கு மரியாதை செலுத்தும் விதமாக தமிழர் தேசங்களில் துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (ம-3)

## கொரோ...

க்கை 586 ஆக அதிகரித்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ம-3)

## வர்த்தக நிலையங்களில் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுப்பு

(கொழும்பு)

தேசிய உணவு பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு நாடளாவியரீதியில் வர்த்தக நிலையங்களை பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் எதிர்வரும் சித்திரை புதுவருடப் பிறப்பு மற்றும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்பு கருதி கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் காணப்படும் வர்த்தக நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ரி. நஜீப் கான் தலைமையில் பரிசோதனை செய்யும் நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது வர்த்தக நிலையங்களில் உள்ள பொருட்களின் காலாவதி திகதி மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை என்பன தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், கோவிட் பாதுகாப்பு தொடர்பிலான சுகாதார விதிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இதில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.நௌபர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-3)

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1674 திகதி 2021.04.05

ஆங்கில எழுத்து: W

வெற்றி இலக்கங்கள்: 02 21 26 29

தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 05/04/2021

சீட்டிழுப்பு இலக்கம் 0808

வெற்றி எழுத்து P, சுப்பர் இலக்க 14

வெற்றி இலக்கங்கள்: 02 25 28 60

### மஹஜன சம்பத

திகதி 2021/04/05

சீட்டிழுப்பு இலக்கம் 4448

ஆங்கில எழுத்து: U

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 8 7 9 5 3 9

தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

சீட்டிழுப்பு திகதி 05.04.2021

சீட்டிழுப்பு இலக்கம் 2743

ஆங்கில எழுத்து: P

வெற்றி இலக்கங்கள்: 16 37 38 80

தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2021.04.05

சீட்டிழுப்பு இலக்கம் - 485

ஆங்கில எழுத்து: B

வெற்றி இலக்கங்கள்: 15 17 46 49

தொலைபேசி : 011 460 3800 / 011 232 4324

உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

கிழமை: திங்கள்

சீட்டிழுப்பு இல: 1244

வர்ணம் : சிவப்பு

சீட்டிழுப்பு திகதி: 05.04.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 125,464,215

வெற்றி இலக்கங்கள்: 17 18 37 52

ஆங்கில எழுத்து: C

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா (Shanida)

கிழமை: திங்கட்கிழமை

சீட்டிழுப்பு இல: 3574

வர்ணம் : கடும் நீலம்

சீட்டிழுப்பு திகதி: 05.04.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 35,159,061

வெற்றி இலக்கங்கள்: 07 18 48 61

ஆங்கில எழுத்து: B

அபிவிருத்தி லொத்தர் சபை

வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் 24,45,074/=

திகதி : 05.04.2021

வெற்றி வாரம் : 3125

வர்ணம் : மஞ்சள்

வெற்றி இலக்கங்கள்: 14 33 41 59

மீனம்

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,002,420

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1418

நிறம் ஊதா

சீட்டிழுப்பு திகதி 05/04/2021

தினம் திங்கட்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: Z 07 26 28 56

அடுத்த சுப்பர் ஜக்பொட் 50,583,502/=

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1747

சீட்டிழுப்பு திகதி 05.04.2021

வெற்றி இலக்கங்கள்: 10 22 39 46

ஆங்கில எழுத்து: K

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 23,936,644

6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

தொ. பே. : 0112 333 546/47

Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

யாழ். நகரை அண்டிய பிரதேசத்தில் காணி வாடகைக்குத் தேவை. (3925)

076 678 7288
077 759 0427

## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட கட்டடமொன்றில் கட்டில், அலுமாரி, T.V போன்ற தளபாடமிடப்பட்ட இணைந்த குளியலறை கொண்ட அறைகள் மற்றும் வீடுகள் வாடகைக்குண்டு. (6474)

077 105 6694

## யாழ் கிளை தற்காலிக இடமாற்றம்

V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை

COVID-19 யாழ் நகர முடக்கம் காரணமாக

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் இல் இயங்கிவந்த எமது யாழ் கிளை மறு அறிவித்தல் வரை

College Of International Migration Skills
49A, சப்பல் வீதி
யாழ்ப்பாணம்
(யாழ் பொது நூலகம் அருகில்)
இல் இயங்குகிறது

(C-1807) 0768226241

## உடனடி வேலை வாய்ப்பு

V2 TRAVELS
விரைவு பொதிகள் சேவை (C-1807)

வாடிக்கையாளர் சேவை அலுவலர்

எமது அனைத்து கிளைகளிலும் வேலை செய்யக்கூடியவராகவும் அதிக நேரம் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்

வயது :-35 வயதிற்குட்பட்டோர் (ஆண்கள் மட்டும்)
சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம்
சம்பளம் - 25'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0777068777
v2vacancies@gmail.com


# உடன் அமுலாகும் வகையில் பாம் எண்ணெய் இறக்குமதிக்குத் தடை

## ஜனாதிபதி கோட்டாபய உத்தரவு

(கொழும்பு)

இலங்கைக்கு பாம் எண்ணெய் இறக்குமதியை உடன் அமுலுக்குவரும் வகையில் தடைசெய்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்.

ஜனாதிபதியின் செயலாளரினால் இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்திற்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியால் நேற்று திங்கட்கிழமை இவ்வாறு மரக்கறி எண்ணெய்யை இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டது. அதற்கமைய ஏற்கனவே இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறி எண்ணெய் விநியோகத்தை உடனடியாக நிறுத்திவைக்க சுங்க திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு முள்தேங்காய் உற்பத்திக்கும் முழுமையாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் முள்தேங்காய் உற்பத்திக்கு தடை விதிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அறிவித்திருந்தார்.

அதற்கமைய இதுவரையில் பயிரிடப்பட்டுள்ள முள்தேங்காய் செடிகளை கட்டம் கட்டமாக அகற்றி அவற்றுக்கு பதிலாக சூழலுக்கு ஏதுவான செடிகளை நாட்டுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (ம-03)


## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி

(C-1841)
0768226240 DHL

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், உரும்பிராய் கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
**தரகர் தேவையில்லை.**
(கோப்பாய் வீதி கிருஷ்ணன் கோவிலுக்கு அருகாமையில்) (6476)

☎-077 288 0152
077 623 4204, 077 235 2656

## 2021 G.C.E (O/L) மாணவர்களே

சென்ற வருடம் தரம் 10 இன் பல விஞ்ஞான பாட அலகுகளை கற்கவில்லையா? கவலையை விடுங்கள்.
"zoom" மூலமாக கற்க இன்றே பதிவு செய்யுங்கள்.

31 வருட தனியார் கல்வி கற்பித்தலில் அனுபவத்துடனும் திறமையுடனும்
ஆசிரியர்: **ஷங்கர் வாமன்**

Zoom Classes
முதல் 3 வகுப்புக்கள் இலவசம் பின்னர் பதிவு செய்யலாம்.

தரம் 06 தொடக்கம் O/L வரையிலான வகுப்புகளும் zoom இல் நடைபெறுகின்றன. (6470)

Whatsapp, Viber, Normal call
077 740 4883

## அண்ணா EXPRESS Courier Services

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-1842)

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| சங்கானை<br>ஆவரங்கால்<br>நெல்லியடி<br>சங்கத்தானை | பளை<br>கிளிநொச்சி<br>புதுக்குடியிருப்பு<br>முல்லை | மல்லாவி<br>மன்னார்<br>வவுனியா<br>கொழும்பு |

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## வேலை வாய்ப்பு

எமது NGC தனியார் நிறுவனத்தில் வேலை வாய்பிற்கான பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

◆18 வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

நேர்முகத் தேர்வு மூலம் தெரிவு செய்யப்படுவீர்கள்.
தகைமை : O/L , A/L (C-1889)

☎-077 280 3773, 021 790 4574


# மரண அறிவித்தல்



## சிவலிங்கம் சிவனேசன்

உடுவில் கிழக்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவலிங்கம் சிவனேசன் நேற்று முன்தினம் (04.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவலிங்கம் - தேவி தம்பதியரின் அன்பு மகனும் முத்துக்குமார் (ராசா) - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் றெஜினாவின் அன்புக் கணவரும் கம்சிகா, பூஜா, டான்சன், பரத் ஆகியோரின் பாசமிகு தந்தையும் உசாநந்தினி, ஜெசந்தன் (நோர்வே), நளினி (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும் ஜெயம், தயா (சுவிஸ்), ஜெஸ்மி (நோர்வே), மதீஸ்வரன், றயனிகாந் (ஜேர்மனி), வனிதா, அனிதா (இலண்டன்), றஜிக்காந் ஆகியோரின் அன்பு மைத்துனரும் லக்ஷன், சங்கீதா, அலெக்ஸ், யனுசியா, யனிஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் தெயோ, சைமன், லெயோ (நோர்வே) ஆகியோரின் பெரியப்பாவும் காலஞ்சென்றவர்களான தளையசிங்கம் - செல்லம்மா தம்பதியரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.04.2021) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-1894)

உடுவில் கிழக்கு.
இணுவில்.
076 143 6454
தகவல் : குடும்பத்தினர்


## NORTH LANKA IIT CITY CAMPUS

B.Ed. புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

காலம்: I. B.Ed. - 3 Years.
தகமை: G.C.E A/L 3 Passes

II. B.Ed. Top up 1 Year
தகமை: ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அல்லது கல்வியியற்கல்லூரி பாடநெறியை பூர்த்திசெய்த ஆசிரியராக இருத்தல்வேண்டும்.

விண்ணப்ப முடிவுத்திகதி 14/04/2021

விண்ணப்பப்படிவங்களை ரூபா 1000/= செலுத்தி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

18/04/2021 காலை 10 மணிக்கு எம்முடைய காரியாலயத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

UGC அங்கீகாரம்

மேலதிக தொடர்புகளுக்கு
Director - 0767504535
Registrar - 0778849677
Address- Top Floor, People's Bank, (C-1893)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.